03.09.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விவசாயிகளுக்கு நேரடி வட்டி மானியம் மத்திய அரசுக்கு ரிசர்வ் வங்கி கோரிக்கை

மும்பை:வங்கிகளின் வாராக்கடனில், வேளாண் துறையின் பங்கு அதிகரித்து வருவது குறித்து, கவலை தெரிவித்துள்ள ரிசர்வ் வங்கி, விவசாயக் கடனுக்கான வட்டி மானியத்தை, மத்திய அரசே, நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கலாம் என, தெரிவித்துள்ளது. வங்கிகள், 3 லட்சம் ரூபாய் வரையிலான குறுகியகால பயிர் கடனுக்கு, 7 சதவீத வட்டியில், கடன் வழங்குகின்றன. இதில், 3 சதவீதத்தை, மத்திய அரசு, ரிசர்வ் வங்கி மூலம் மானிய மாக வழங்குகிறது. அதன் அடிப்படையில், வங்கிகள், விவசாயிகளிடம், 4 சதவீத வட்டியை மட்டுமே வசூலிக் கின்றன. எஞ்சிய, 3 சதவீதத்தை, ரிசர்வ் வங்கியிடம் இருந்து, காலாண்டிற்கு ஒருமுறை பெற்றுக் கொள்கின்றன. இப்படி, வட்டி மானியம் அளிக்கப்பட்டும் கூட, விவசாயக் கடன் பிரிவில், வங்கிகளின் வாராக்கடன் அதிகரித்து, பெரும் சுமையை ஏற்படுத்தி வருகிறது.

இதை கட்டுப்படுத்த, சமையல் எரிவாயு சிலிண்டருக்கு, பயனாளிகளின் வங்கிக் கணக்கில், நேரடி யாக மானியம் வழங்குவதை போல், விவசாயிகளின் வங்கிக் கணக்கில், நேரடியாக பயிர்கடனுக்கான வட்டி மானியம் வழங்கலாம் என, ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இதன்மூலம், 'அனைத்து விவசாயிகளுக்கும், சீரான வட்டி விகிதத்தில் கடன் கிடைக்கும் என்பதுடன், பல்வேறு முறைகேடுகளுக்கும் முற்றுப்புள்ளி

வைக்கலாம்' என, அது கருதுகிறது. நடப்பு, 2014 - 15ம் நிதியாண்டின் மத்திய பட்ஜெட்டில், விவசாயக் கடனுக்கு வட்டி மானியம் வழங்க, 13 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது.

## டெல்டா பாசனம் நீர் குறைப்பு

மேட்டு:மேட்டூர் அணையில் இருந்து, டெல்டா பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீரின் அளவு குறைக்கப்பட்டது.சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து, ஆக., 9ம் தேதி முதல், காவிரி டெல்டா பாசனத்திற்கு, தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. கடந்த சில நாட்களாக, வினாடிக்கு, 16 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டு வந்தது.இந்நிலையில், அணைக்கான நீர்வரத்து, நேற்று முன்தினம், வினாடிக்கு, 6,372 கனஅடியாக இருந்தது, நேற்று, 5,851 கனஅடியாக சரிந்தது. நீர் திறப்பை விட, நீர்வரத்து வெகுவாக குறைந்ததால், நீர்மட்டம் நேற்று, 90 அடியாக சரிந்தது.இதையடுத்து, நேற்று பிற்பகல், 12:00 மணி முதல், டெல்டா பாசனத்துக்கான நீர் திறப்பு, வினாடிக்கு, 15 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது.

## தமிழகத்தில் அரிசி விலை 'கிடுகிடு'



சென்னை: தமிழகத்திற்கு, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இருந்து வரும், உயர் ரக அரிசி விலை கிலோவுக்கு, நான்கு ரூபாய் வரை உயர்ந்துள்ளது. குண்டரிசி, டீலக்ஸ் உள்ளிட்ட அரிசி விலை குறைந்துள்ளது.

தமிழகத்தில், நெல் விளைச்சல் இருந்தாலும், தேவைக்கேற்ப இல்லாததால், அரிசி தேவைக்கு, கர்நாடகா, ஆந்திர மாநிலங்களையே நம்ப வேண்டியுள்ளது. ஆந்திராவிலிருந்து, பாபட்லா வகையும், கர்நாடகாவிலிருந்து, சோனா, காவிரி சோனா வகை நெல்லும் தமிழகத்திற்கு வருகின்றன.ஆந்திரா, கர்நாடகாவிலும், பருவ மழை பெய்யாததால், விளைச்சல் குறைந்து, ஒரு மூட்டை நெல்லுக்கு, 100 - 200 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. இதனால், இந்த வகை, உயர் ரக அரிசி விலை, கிலோவுக்கு, இரண்டு முதல், நான்கு ரூபாய் வரை உயர்ந்துள்ளது.சில்லரையில், ஒரு கிலோ சோனா, 44ல் இருந்து, 46 ரூபாய்; வெள்ளை பொன்னி, 44ல் இருந்து, 48 ரூபாய்; ரெய்ச்சூர் பச்சரிசி, 37ல் இருந்து, 40 ரூபாய்; பாபட்லா, 38ல் இருந்து, 40 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.**சேலம் செவ்வாய்ப்பேட்டை அரிசி வியாபாரி சீனிவாசன் கூறுகையில்,** "தமிழகத்தில், நவம்பரில் தான் அறுவடை நடக்கும் என்பதால், இன்னும் விலை கூட வாய்ப்புள்ளது," என்றார்.வெளி மாநில வரத்தான உயர்ரக அரிசி விலை உயர்வால், பிற அரிசி வகைகளின் விலையும் உயருமோ என, மக்கள் அச்சமடைந்துள்ளனர். **இதுகுறித்து, தமிழ்நாடு நெல், அரிசி மொத்த வியாபாரிகள் சம்மேளன தலைவர் துளசிங்கம் கூறுகையில்,** "வெளி மாநில வரத்தான, ஒரு சில உயர்ரக அரிசி விலை சற்று கூடியுள்ளது. குண்டரிசி, ஏ.டி.டி., 45, டீலக்ஸ் வகை அரிசி கிலோவுக்கு, ஒரு ரூபாய் முதல், இரண்டு ரூபாய் வரை குறைந்துள்ளது. மற்ற வகை அரிசி விலை உயர வாய்ப்பில்லை," என்றார்.

## 'ஷிக்காரா' கழுகு ஊட்டியில் முகாம்




குன்னூர்:பறவைகளின் கூடுகளை தேடிச் சென்று, முட்டைகளையும், குஞ்சுகளையும் உண்ணும் அரிய வகை கழுகான, 'ஷிக்காரா', குன்னூரில் முகாமிட்டு உள்ளது.
நீலகிரி மாவட்டத்தில், ஏராளமான பறவையினங்கள் வசிக்கின்றன. அழிவின் பட்டியலில் உள்ள, 'பாறு கழுகுகளும்' இங்கு உள்ளன. தற்போது, மிக அரிதாக காணப்படும் ஒரு வகை கழுகு, குன்னூர் அருகே தென்பட்டுள்ளது. ஊட்டி அரசு கலைக்கல்லூாரி உதவி பேராசிரியர் ராமகிருஷ்ணன் கூறுகையில், "இவ்வகை கழுகுகளுக்கு, 'ஷிக்காரா' என்று பெயர். தனிமையாக இருக்கும் இந்த வகை கழுகுகள், மற்ற பறவைகளின் கூடுகளை தேடிச்சென்று, அங்குள்ள முட்டைகள், பறவை குஞ்சுகளை உண்ணக்கூடியவை," என்றார்.

## வேளாண் 'டிப்ளமோ' படிப்பு கலந்தாய்வு இன்று துவக்கம்

கோவை:தமிழ்நாடு வேளாண் பல்கலையில், 'டிப்ளமோ' படிப்புக்கான கலந்தாய்வு இன்று துவங்குகிறது.தமிழகத்தில், வேளாண் பல்கலை யின்

கீழ், எட்டு அரசு உதவிபெறும் கல்லூாரிகள், ஆறு தனியார் வேளாண் டிப்ளமோ கல்லூாரிகள் செயல்பட்டுவருகின்றன. இதில், முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்காக, 690 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த மாதம்,இளங்கலை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப படிப்புகளுக்கான கலந்தாய்வு நடந்து முடிந்தது. டிப்ளமோ படிப்புகளுக்கான கலந்தாய்வு இன்று துவங்குகிறது. 1,874 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். வேளாண் பல்கலை, டீன் மகிமைராஜ் கூறுகையில், "டிப்ளமோ படிப்புக்காக நடப்பாண்டு பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து, தரவரிசை அடிப்படை யில், 800 மாணவர்கள் கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கலந்தாய்வு இரண்டு நாட்கள் நடக்க உள்ளது. இதில்,காலியிடங்கள் ஏற்பட்டால், அடுத்தகட்ட கலந்தாய்வில் நிரப்பப்படும்," என்றார்.

## மேட்டூர் அணையின் நீர்திறப்பு குறைப்பு

மேட்டூர் : மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு 15 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது. அணைக்கு நீர்வரத்து 4,020 கனஅடியாகவும், நீர்மட்டம் 89.13 அடியாகவும், நீர் இருப்பு 51.66 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 800 கனஅடி நீரும் திறக்கப்பட்டது.

## அணைகள் நீர்மட்டம் முழுஅளவை எட்ட... பருவமழை தொடர விவசாயிகள் எதிர்பார்ப்பு

பொள்ளாச்சி: பொள்ளாச்சி பகுதிகளில், எதிர்பார்த்த அளவு பருவ மழை பெய்யாததால், இந்தாண்டு அணைகள் நிரம்புமா? என்பது கேள்விக்குறியாகியுள்ளது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆழியாறு அணை, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் முக்கிய அணையாக உள்ளது. இந்த அணையில், சேகரிக்கப்படும் தண்ணீர் பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, கேரள நீர் பாசனத்திற்கும் வழங்கப் படுகிறது. இது தவிர, குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பழைய ஆயக்கட்டில், 6 ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்களும்; புதிய ஆயக்கட்டில், 42 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு, ஆழியாறு ஆறு மூலமாகவும்; புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு வேட்டைக்காரன்புதுார் கால்வாய் வழியாகவும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், பாசனம் மற்றும் குடிநீருக்கு தண்ணீர் திறப்பு மற்றும் நீர் வரத்து குறைவு போன்ற காரணங்களினால் அணை நீர்மட்டம், 105 அடிக்கு குறைந்தது. இந்நிலையில், கடந்த மாதம் பெய்த மழையால் அணை நீர்மட்டம் உயர்ந்தது. எனினும் எதிர்பார்த்த அளவு பெய்யாததால், அணைகள் இந்தாண்டு நிரம்புமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

கடந்தாண்டு பருவமழை கை கொடுத்ததால், ஆழியாறு அணை நீர்மட்டம் கொள்ளளவை எட்டியது. தொடர்ந்து, இரண்டு மாதங்கள் நிரம்பிய நிலையிலேயே, அணை காட்சியளித்தது. இந்நிலையில், இந்தாண்டு பருவமழை கை கொடுக்காததால், அணை நிரம்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக, 116 அடியாகவே அணை நீர்மட்டம் உள்ளது. நேற்றைய நிலவரப்படி, ஆழியாறு அணையின் மொத்த கொள்ளளவான 120 அடியில், தற்போது, 116.50 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 282 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் மற்றும் பாசனத்திற்காக 363 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

## முருங்கப்பாக்கத்தில் கால்நடை கண்காட்சி

புதுச்சேரி:புதுச்சேரி அரசு கால்நடைத்துறை சார்பில், முருங்கப்பாக்கம் கால்நடை கிளை மருத்துவமனையில் கண்காட்சி நடந்தது.45 கிடேரி கன்றுகள் கொண்டு வரப்பட்டன. சிறந்த கிடேரி கன்றுகளை, கால்நடை மருத்துவ குழுவினர் தேர்வு செய்தனர்.அனைத்து கிடேரி கன்றுகளுக்கு குடற்புழு நீக்கினர். கால் நடை வளர்ப்பு குறித்த கருத்தரங்கம் நடந்தது.கால்நடைத்துறை இயக்குனர் பத்மநாபன் தலைமை தாங்கினார். இணை இயக்குனர் ராஜ்மோகன் முன்னிலை வகித்தார். கால்நடை மருத்துவர்கள் தமிழ்செல்வன், சுப்பராவ், மற்றும் மரியா கலந்து கொண்டு, தேர்வு செய்யப்பட்ட கன்றுகளுக்கு, முதல் பரிசு ரூ. 500, இரண்டாம் பரிசு ரூ.300, மூன்றாம் பரிசு ரூ.200 வழங்கினர். மொத்தம் 33 கிடேரி கன்றுகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.கால்நடை மருத்துவ உதவியாளர் சாரங்கபாணி நன்றி கூறினார்.

## நெல்லுக்கு பதில் தோட்டப்பயிர்கள் வளர்ப்பதில் விவசாயிகள் ஆர்வம், மானிய விலையில் விதைகள் கிடைப்பதால் ஈடுபாடு



பொன்னேரி: மானிய விலையில் விதைகளும், தினமும் வருவாயும் கிடைப்பதால், மல்லி, அவரை, துவரை, எள், கேழ்வரகு உள்ளிட்ட தோட்டப் பயிர்கள் வளர்ப்பதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பொன்னேரி அடுத்த, சிறுவாக்கம், மூலத்தாங்கல், கங்கையாடிகுப்பம், குதிரைப்பள்ளம் ஆகிய கிராமங்களில், நெல் பயிரை தவிர்த்து, மாற்று பயிர்களை வளர்ப்பதில், விவசாயிகள் அதிக அளவில் ஈடுபட்டு வருகின்றனர். இக்கிராமங்களில், 200 ஏக்கர் பரப்பளவில், மல்லி, அவரை, துவரை, காராமணி, கேழ்வரகு, கத்தரிக்காய், எள், கீரைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான தோட்டப் பயிர்களை அதிகளவில் வளர்த்து வருகின்றனர். குறிப்பாக, சம்பா, குறுவை, சொர்ணவாரி ஆகிய பருவங்களில், நெல் பயிரிடும் விவசாயிகள், விளை நிலத்தின் ஒரு பகுதியில், தோட்டப் பயிர்களை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இதுகுறித்து, அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது: பருவத்திற்கு ஏற்ப, ஆண்டு முழுவதும், ஏதாவது ஒரு தோட்டப்பயிர் பயிரிட்டு வருகிறோம். இதற்கு, கடினமாக உழைத்தால், உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். பெரியளவில் வருவாய் இல்லை என்றாலும், தினமும் வருவாய் கிடைக்கிறது. தோட்டப் பயிர்களை விற்பனை செய்வது எளிதாக உள்ளது. இதனால், தோட்டப் பயிர்களை வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகிறோம். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: மேற்கண்ட கிராமங்கள், கொற்றலை ஆற்றை ஒட்டி உள்ளதால், மண் வளமும், நிலத்தடி நீரும் நல்ல நிலையில் உள்ளன. இதனால், அப்பகுதியில், தோட்டப் பயிர்கள் நன்கு வளர்கின்றன. நகர்ப்புற காய்கறி மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ், மானிய விலையில் விதைகள், ஊக்கத்தொகை, நான்கு சக்கர

வாகனம் உள்ளிட்டவைகளை, தோட்டப் பயிர்கள் பயிரிடும் விவசாயிகள் பெறலாம். மானியம் குறித்த தகவல்களை, தோட்டக்கலை துறை அதிகாரிகளை சந்தித்து பெறலாம். இவ்வாறு, அவர் கூறினார்.

## ஆந்திரா, கர்நாடகாவில் நெல் விலை கிடு கிடு: தமிழகத்தில் அரிசி விலை எகிறியது

சேலம்: ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில், உயர்ரக நெல் விலை உயர்ந்துள்ளதை அடுத்து, தமிழகத்தில் அரிசி விலையில், கிலோவுக்கு, 4 ரூபாய் வரை, அதிகரித்து இருப்பது, பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தின் நெல், அரிசியை தேவையை பூர்த்தி செய்வதில், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களே முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆந்திரா மாநிலம் நிஜாம்பாத், நந்தியால், கோதாவரி, மண்டைபேட்டை, நாயுடுபேட்டை ஆகிய இடங்களில் இருந்து, தமிழக அரிசி ஆலைகளுக்கு, அதிக அளவில் பி.பி.டி., (பாபத்லால்) நெல் விற்பனைக்கு வருகிறது. கர்நாடகா மாநிலம் கங்காவதி, கரட்டகி, சித்தனூர், மங்கி, மான்டி ஆகிய இடங்களில் இருந்து, சோனா, காவிரி சோனா ஆகிய நெல், தமிழக அரிசி ஆலைகள், மண்டிகளுக்கு விற்பனைக்கு வருகிறது. ஆந்திராவில் நடப்பாண்டில் எதிர்பார்த்த பருவ மழை பெய்யாததால், அணைகளில் நீர் இல்லை. இதை காரணம் காட்டி வியாபாரிகள், பி.பி.டி., நெல் ரகத்தின் விலையை அதிகரித்துள்ளனர். கடந்த வாரம் வரை, 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல், 1,500 ரூபாய்க்கு விற்றது, 1,800 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது. கர்நாடகா மாநிலத்தில், தற்போது அணைகளில் நீர் உள்ள போதும், இரண்டாம் போக சாகுபடிக்கு, மழையை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால், கர்நாடகாவிலும் நெல் விலை, 200 ரூபாய் வரை, அதிகரித்துள்ளது. கர்நாடகா சோனா, 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை,

1,600 ரூபாய்க்கு விற்றது, 1,750 ரூபாயாகவும், காவேரி சோனா, 1,200 ரூபாய்க்கு விற்றது, 1,400 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது. ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் நெல் விலையில் உயர்வு ஏற்பட்ட போதிலும், தமிழகத்தில் விளையும் நெல் விலை உயரவில்லை. அதே நேரத்தில், ஆந்திரா, கர்நாடகா நெல்லை பயன் படுத்தி தயார் செய்யப்படும் அரிசி விலை, கிலோவுக்கு, 4 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. மொத்த விலையில் இருந்து, சில்லரை விலையில், கிலோவுக்கு, 3 ரூபாய் வரை, அதிகரித்து விற்கப்படுகிறது. உயர்ரக அரிசி விலை உயர்ந்ததை அடுத்து, ஐ.ஆர்.,20, அம்பை 16, இட்லி கார், சோனா பொன்னி ரக அரிசி விலையில் எந்நேரம் வேண்டுமானாலும், விலை உயர்வு ஏற்படலாம் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து சேலம் செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த அரிசி வியாபாரி சீனிவாசன் கூறியதாவது: தமிழகத்தில் நெல் அறுடை துவங்க இன்னும் சில மாதம் உள்ளன. இந்நிலையில், தமிழக அரிசி ஆலைகளுக்கு, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த உயர்ரக நெல் வகைகள் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இது அரிசி விலையில் எதிரொலித்துள்ளதால், உயர்ரக அரிசி விலையில், கிலோவுக்கு, 3 ரூபாய் முதல், 4 ரூபாய் வரை, விலை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் நவம்பர் மாதத்தில் தான் நெல் அறுவடை துவங்கும் என்பதால், இன்னும் இரண்டு மாத காலத்தில், அரிசி விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## நெல் மீதான செஸ் வரியை நீக்க வேண்டும்: அரிசி ஆலை உரிமையாளர்கள் கோரிக்கை

சேலம்: "தமிழகத்தில் விளையும் நெல் ஓரிடத்தில் இருந்து, மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு, மார்க்கெட்டில் கமிட்டி தொகை (செஸ்) வரியை

தமிழக அரசு நீக்க வேண்டும்' என, சேலம் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சேலம் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க, பொதுக்குழு கூட்டம் தலைவர் சியாமளநாதன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விபரம்: சேலம் மாநகரின் வணிக இதயமான செவ்வாய்ப்பேட்டை, லாரிபேட்டை பகுதிகளில் பாதாளசாக்கடை திட்டம், புதிய குடிநீர் இணைப்பு திட்டம், மின்சார கேபிள் பதிக்கும் திட்டங்களுக்காக குழிகள் தோண்டப்பட்டு, பணி முடிக்கப்படாமல் இருக்கின்றன. அனைத்து வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, வியாபாரம் சரிந்து மிகப்பெரிய நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். எனவே, செவ்வாய்ப்பேட்டை பகுதியில், ரோடுகளை சரி செய்ய மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சேலம், செவ்வாய்ப்பேட்டையில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. லாரி ஸ்டாண்டை, பொதுமக்கள் நலன் கருதி வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் தொகை பெருக்கத்தின் அடிப்படையில், பெருநகரங்களில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் செயல்பட்டு வரும் காய்கறி, பழ மார்க்கெட்டுக்களை, நகரத்தை ஒட்டியுள்ள வேறு இடங்களுக்கு மாற்றம் செய்ய வேண்டும். தமிழகத்தில் மதிப்பு கூடுதல் வரி நடைமுறைப்படுத்தியதில் இருந்து வியாபாரம் தாரளமாக நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் விளையும் நெல் ஓரிடத்தில் இருந்து, மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு, மார்க்கெட்டிங் கமிட்டி தொகை (செஸ்), 1 சதவீதம் செலுத்தி தடையில்லா சான்று பெற்று, செல்ல வேண்டி இருக்கிறது. அரிசி ஆலை உரிமையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, 1 சதவீத மார்க்கெட்டிங் செஸ் வரியை, அறவே நீக்கி, தமிழக அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். தமிழக அரிசி ஆலைகளில், ஈ.டி.பி., இயந்திரம் பொறுத்த மாசு கட்டுப்பாட்டு வாரியம்

உத்தரவிட்டுள்ளது. அரிசி ஆலைகளின் மூலம், நாள் ஒன்றுக்கு, மூன்று லட்சம் யூனிட் மின்சாரம் செலவாகிறது. எனவே, ஈ.டி.பி., சாதனம் பொறுத்துவதில் இருந்து, அரிசி ஆலைகளுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும். வியாபாரிகளை முழுமையாக அடிமைப்படுத்தும், உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்ட நடைமுறைப்படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும். வடமாநிலங்களில் இருந்து, ரயில்வே வேகன் மூலம் வரும் அத்தியாவாசிய பொருட்களுக்கான வாடகை, 6.5 சதவீதம், மத்திய அரசு உயர்த்தி உள்ளது. இதனால், அரிசி, கோதுமை, பருப்பு உள்ளிட்ட உணவு பொருட்கள் விலை உயர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, சரக்கு ரயில் வாடகை கட்டணத்தை மத்திய அரசு குறைக்க செய்ய வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## டெல்டா பாசனத்துக்கான மேட்டூர் நீர்திறப்பு குறைப்பு

மேட்டூர்: மேட்டூர் அணை டெல்டா பாசன நீர்திறப்பு நேற்று மதியம், 12 மணி முதல், வினாடிக்கு, 15,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த, 28ம் தேதி, 93.560 அடியாகவும், நீர் இருப்பு, 56.958 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 13,000 கனஅடியாக இருந்த டெல்டா நீர்திறப்பு, கடந்த, 29ம் தேதி, 16,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் வினாடிக்கு, 6,372 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 5,851 கனஅடியாக சரிந்தது. நீர்திறப்பை விட, நீர்வரத்து வெகுவாக குறைந்ததால் நீர்மட்டம் நேற்று, 90.050 அடியாக சரிந்தது. கடந்த, 4 நாட்களில் நீர்மட்டம், 3 அடி சரிந்த நிலையில், நேற்று மதியம், 12 மணி முதல், நீர்திறப்பு வினாடிக்கு, 15,000 கனஅடியாக குறைக்கப்பட்டது.

## பைபாஸ் பேரிகார்டு, இயற்கை வளங்கள் மீது விளம்பரம் செய்யக்கூடாது: கலெக்டர் எச்சரிக்கை

நாமக்கல்: "மாநில, தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் உள்ள பேரிகார்டு மற்றும் இயற்கை வளங்கள் மீது விளம்பரம் செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி எச்சரித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை: இயற்கை வளங்களான மலைகள், குன்றுகள், பாறைகள், சாலையோர மரங்கள் மற்றும் தேசிய, மாநில நெடுஞ்சாலைகளின் நடுவில் உள்ள பேரிகார்டு மீது விளம்பரம் செய்யப்பட்டிருந்தால், அவற்றை அகற்ற வேண்டும் என உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மலைகள், குன்றுகள், பாறைகள், சாலையோர மரங்கள் மற்றும் தேசிய, மாநில நெடுஞ்சாலைகளின் நடுவில் உள்ள பேரிகார்டு மீது விளம்பரங்கள் இருந்தால், அவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், அதுபோல் செய்யப்பட்டுள்ள விளம்பரங்களை ஆய்வு செய்து, அவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க, ஆர்.டி.ஓ., தாசில்தார் மற்றும் அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து, தாசில்தார்கள் அளித்த அறிக்கையில், நாமக்கல் மாவட்டத்தில், 16 இடங்களில் விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றை உடனடியாக அழிக்கப்பட்டது. மேலும், வல்வில் ஓரி விழாவை முன்னிட்டு, ஏற்கனவே கொல்லிமலை பகுதி முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு, மரங்களில் வைக்கப்பட்டிருந்த, 136 விளம்பர பலகைகள் அகற்றப்பட்டன. நாமக்கல் மாவட்டத்தில் இயற்கை வளங்களான மலைகள், குன்றுகள், பாறைகள், சாலையோர மரங்கள், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் நடுவில் உள்ள தடுப்புச்சுவர் ஆகியவற்றில், விளம்பரங்கள் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை மீறுவோர்

மீது வழக்குபதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் மூலம், மூன்று மாத சிறை தண்டனையும், 200 ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## வேளாண் அறிவியல் நிலையம் செப்.,8ல் கறவை மாடு பயிற்சி

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில், செப்டம்பர், 8ம் தேதி, கறவை மாடுகள் பராமரிப்பு, நோய் மேலாண்மை என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், செப்டம்பர், 8ம் தேதி, காலை, 9 மணிக்கு, "கறவை மாடுகள் பராமரிப்பு மற்றும் நோய் மேலாண்மை' என்ற தலைப்பில், ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடக்கிறது. பயிற்சி முகாமில், கறவைமாடு இனங்கள், இனவிருத்தி முறைகள், தீவன முறைகள், கறவைமாடுகளைப் பராமரிக்கும் வழிமுறை, கறவைமாடுகளில் ஏற்படும் பல்வேறு நோய்கள், அதன் தாக்கம் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து விளக்கப்படும். மேலும், நோய் தாக்கம் ஏற்படும் கால அட்டவணைக்கேற்ப தடுப்பூசி அளிக்கும் முறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்படும். அதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் சென்றோ அல்லது தொலைபேசி மூலமாகவோ, செப்டம்பர், 7ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சிக்கு வரும் விவசாயிகள், தங்களுடைய ஆதார் எண்ணை கண்டிப்பாக பதிவு செய்யவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

ப.வேலூர்: வெங்காயத்தின் விலை அதிகரித்து வருவதால், ஹோட்டல்களில் அவற்றை தவிர்த்து, முட்டைகோஸை பயன்படுத்தத் துவங்கி உள்ளனர். இது வாடிக்கையாளர்களை கடும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

ப.வேலூர் பகுதிகளில், ஹோட்டல்களில், வெங்காயத்தை பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவு பதார்த்தங்களுக்கு, வெங்காயம் விலை உயர்வால் முட்டைக்கோஸை பயன்படுத்துகின்றனர். ஹோட்டல்களில் உணவு தயாரிப்பதற்கு அதிக அளவில் பெரிய வெங்காயம் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, ஃபாஸ்ட் ஃபுட், ஹோட்டல்களில், முட்டை பிரியாணி, நூடுல்ஸ் போன்ற உணவு பதார்த்தங்கள் தயாரிப்பதில் பெரிய வெங்காயம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்நிலையில், வெங்காயத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து, தற்போது, ஒரு கிலோ, 70 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. அதனால், ஹோட்டல் உரிமையாளர்கள், ஃபாஸ்ட் ஃபுட் கடைக்காரர்கள், வெங்காயத்துக்கு பதில், முட்டைகோஸ் பயன்படுத்தத் துவங்கி உள்ளனர். மேலும், பெரும்பாலான ஹோட்டல்களில், வெங்காயம் இல்லாத ஆம்லெட்டே வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இது வாடிக்கையாளர்களை கடும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

## மல்லிகைப்பூ விலை சரிவு: கவலையில் விவசாயிகள்

ப.வேலூர்: தினசரி மார்க்கெட்டில், பூக்கள் விலை கடுமையாக சரிந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ப.வேலூர் அதன் சுற்று வட்டாரப்பகுதிகள் மற்றும் கரூர் மாவட்டங்களில் இருந்து, பூக்களை சாகுபடி செய்து தினசரி பூ மார்க்கெட்டிற்கு ஏலத்திற்கு கொண்டு வருகின்றனர். அவ்வாறு கொண்டு வரப்படும் பூக்களை,

உள்ளூர் வியாபாரிகள் ஏலம் எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். கடந்த வாரம், ஒரு கிலோ, 1,500 ரூபாய்க்கு ஏலம்போன மல்லிகை பூ, நேற்று ஒரு கிலோ, 150 ரூபாய்க்கு விற்பனையானது. 200 ரூபாய்க்கு விற்பனையான சம்பங்கி பூ, 100 ரூபாய்க்கும், 200க்கு ஏலம் போன, சிகப்பு அரளி, 20 ரூபாய்க்கும், விற்பனையானது. தற்போது விசேஷ தினங்கள் இல்லாததால், பூக்களின் விலை கடுமையாக சரிந்துள்ளது. இது பயிரிட்ட விவசாயிகளை கடும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

## நல்லெண்ணெய் விலை வீழ்சியலால் உற்பத்தி சரிவு

ஈரோடு: ஏற்றுமதியில் ஏற்பட்ட பாதிப்பால், நல்லெண்ணெய் விலை கடும் சரிவை சந்தித்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் தயாரிக்கப்படும் நல்லெண்ணெய், பல மாநிலங்களில் மட்டுமின்றி, சீனா, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது நல்லெண்ணெயில், ரசாயன பூச்சிக்கொல்லி கழிவு இருப்பதாக கூறி, பல நாடுகள் இந்தியாவில் இருந்து நல்லெண்ணெயை ஏற்றுமதி செய்ய தடை விதித்துள்ளன. தற்போது, 20 சதவீதத்துக்கும் குறைவாகத்தான் நல்லெண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால், உள்நாட்டில் நல்லெண்ணெய் விலை சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த, ஓராண்டுக்கு முன், எள் விலை கிலோ, 120க்கு விற்பனையாகி வந்தது. தற்போது, மேற்கு வங்க மாநிலத்தில் இருந்து கிடைப்பதால், ஒரு கிலோ, 50 முதல், 60 ரூபாய்க்கு விற்பனையாகிறது. தமிழகத்தில் விளையும் எள், ஒரு கிலோ, 60 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதனால் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. விலை குறைந்து வருவதால், விவசாயிகள் எள் பயிரிடுவதை குறைத்து வருகின்றனர். நல்லெண்ணெயை பொறுத்தவரை, கடந்தாண்டு மொத்த விலை, 16 லிட்டர் கொண்ட ஒரு

டின், 2,500 முதல், 3,000 ரூபாய் வரை, விற்பனையானது. தற்போது, 1,800 ரூபாய்க்கு விற்பனையாகிறது. சில்லறை விலையில், கடந்தாண்டு ஒரு கிலோ, 250 ரூபாய்க்கும், தற்போது, 150 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. எண்ணெய் விலை வீழ்ச்சியால்,உற்பத்தியை அதிகரிக்காமல் உள்ளனர். உற்பத்தியாளர்கள், கிலோவுக்கு, 5 ரூபாய் வரை, லாபம் கிடைத்தால் போதும், என்ற நிலை உள்ளது.

இது குறித்து, நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்க, ஈரோடு மாவட்ட செயலாளர் தங்கவேல் கூறியதாவது: ஏற்றுமதி, எள் விலை சரிவு போன்ற காரணத்தால், எண்ணெய் உற்பத்தியும், விலையும் சரிந்துள்ளது. நல்லெண்ணெயின் நன்மைகள் மக்களுக்கு தெரியாமல் இருப்பதால், அவற்றை உபயோகிப்பதில்லை. சன் பிளவர் ஆயில், ரைஸ் பிரான்ட் ஆயில் மிகவும் மலிவாக கிடைப்பதால், அவற்றை பயன்படுத்தி வருகின்றனர். இந்த எண்ணெயை அதிகம் பயன்படுத்துவதால், மக்களுக்கு மூட்டு வலி ஏற்படுகிறது. மேலும், மத்திய, மாநில அரசு, நல்லெண்ணெய் ஏற்றுமதிக்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

## தக்காளி விலை "சரிவு'

சத்தியமங்கலம்: சத்தியமங்கலத்தில் தக்காளி விலையில் சரிவு ஏற்பட்டதால், உணவு விடுதி மற்றும் வீட்டிலும் தக்காளியின் பயன்பாடு அதிகரித்துள்ளது. சத்தியமங்கலம் பகுதியில் கடந்த மாதம் ஒரு கிலோ தக்காளி, 30 ரூபாய்க்கு விற்பனையானது. இதனால், உணவு விடுதிகளில், இட்லி மற்றும் தோசைகளுக்கு தக்காளி சட்னி கொடுக்காமல், பீட்ரூட் மற்றும் கொத்தமல்லி சட்னி வழங்கினர். இதேபோல், வீடுகளில் தக்காளியின் பயன்பாட்டை நிறுத்தினர். இந்நிலையில், கர்நாடகா மாநிலம் மைசூரு மற்றும் பெங்களூரு பகுதியில்

இருந்து தக்காளி இறக்குமதி அதிகரித்தது. அதேபோல் கிராமப்புறத்தில் உள்ள விவசாயிகள், தக்காளியை அதிகமாக உற்பத்தி செய்துள்ளனர். இதனால், தக்காளி விலை கிலோ, 20 ரூபாய்க்கு குறைந்து, தற்போது ஒரு கிலோ, 8 முதல், 10 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

### கூடலூரில் வறட்சி வயல்களில் 'வாட்டம்'

கூடலூர்: கூடலூர் பகுதியில், பருவமழை குறைந்து வயல்களில், நீரின்றி வெடிப்பு

ஏற்பட்டுள்ளது.

கூடலூர் பகுதியில், கடந்த ஜூன் மாதம் பெய்த பருவமழையை நம்பி, விவசாயிகள் நெல் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து, ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கோடை மழை போன்று பருவமழை பெய்தது. கடந்த ஒரு வாரமாக வெயிலும், அதிகாலையில் பணி பொழிவும் எற்பட்டுள்ளது. வெப்பத்தின் தாக்கமும் அதிகரித்துள்ளது. பருவமழை பொய்த்ததால், பெரும்பாலான வயல்களில் நீர் இன்றி நெல் நாற்றுகள் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் கவலை யடைந்துள்ளனர்.

நெல் விவசாயிகள் கூறுகையில்,'கூடலூர் பகுதியில், மிக குறைந்த அளவே மழை பெய்துள்ளது. கடும் வெயிலான காலநிலை நிலவுவதால், வயல்வெளிகள் வறண்டு, வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதே நிலை தொடர்ந்தால், நடவு செய்யப்பட்ட நெல் நாற்றுகள் கருகி நெல் விவசாயம் பாதித்து, பெரும் நஷ்டத்தை சந்திக்கும் சூழல் ஏற்படும்' என்றனர். எனவே, தோட்டக்கலை துறையினர் இப்பகுதிகளை ஆய்வு, விவசாயிகளை காக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பருவநிலை மாறுதல் எதிர்கொள்ளும் திட்டம்: டெல்டா பகுதிக்கு ரூ. 1,560 கோடி ஒதுக்கீடு

திருச்சி: பருவநிலை மாறுதல்களை எதிர்கொள்ளும் வகையில், காவிரி டெல்டா பகுதியில் உள்ள கட்டுமானங்களை நவீனப்படுத்த திட்டத்திற்கு, 1,560 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் உபவடிநில மேம்பாட்டு பணிகள் மூலம், பருவநிலை மாறுதல்களை எதிர்கொள்ளும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தேசிய அளவில், மூன்று உப வடிநிலங்களுக்கான அறிக்கையை, ஆசிய வளர்ச்சி வங்கி தயாரித்துள்ளது. இதில், காவிரி டெல்டா பகுதியும் இடம் பெற்றுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி கொடுத்துள்ள அறிக்கைபடி, காவிரி டெல்டா பகுதியில், கடைமடை மதகுகளில் இருந்து, 25 கி.மீ தூரத்துக்கு, நீரோட்டப்பகுதி சமநிலையில் உள்ளதால், வெள்ளப் பெருக்கின் போது, நீர் வடிவதில் சிரமம் ஏற்படுகிறது. இதனால், வெள்ள நீர் கடலில் புகுவது தடுக்கப்பட்டு, விவசாய நிலங்களில் உப்புநீர் ஊடுருவதும் அதிகரித்துள்ளது. எனவே, "பருவநிலை மாற்றத்தை எதிர்க்கொள்ளும் திட்டத்தை, காவிரி டெல்டா பகுதியில் செயல்படுத்துவதன் மூலம், கடலோர நிலப்பகுதிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்' என, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, காவிரி பாசன திட்ட அதிகாரிகள் கூறுகையில், பருவநிலை மாறுதல்களை எதிர்கொள்ளும் திட்ட உத்தேச மதிப்பிடு தொகை, 1,560 கோடி ரூபாயில், ஆசிய வளர்ச்சி வங்கி, 1,092 கோடி ரூபாய் கடனாக வழங்கும். மீதமுள்ள தொகை, 468 கோடி ரூபாயை தமிழக அரசு வழங்கும். இதில், முதல்கட்டமாக, காவிரி டெல்டா பகுதியில், கீழ்வெண்ணாறு அமைப்பில் உள்ள அடப்பாறு, அரிச்சந்திரா நதி, பாண்டவையாறு, வெள்ளையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாய் ஆகிய பகுதிகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட

உள்ளது. இதன் மூலம், நாகை, திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதி பாசன திட்டப் பகுதிகள் பயனடையும். கீழ் வெண்ணாறு அமைப்பின் மேம்பாட்டு பணிகளுக்கு, 840 கோடி ரூபாய் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தவிர, வெள்ளையாறு மற்றும் பாண்டவையாற்றில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கான, ஒப்பந்தப்புள்ளிகளை கோரவும் அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், வெள்ளையாறு மற்றும் பாண்டவையாறு பாசன திட்டங்களின் ஆவணங்கள், ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

## வாத்தலை அணைக்கட்டு பகுதியில் 68 மி.மீ., மழை

திருச்சி: திருச்சி, வாத்தலை அணைக்கட்டு பகுதியில், நேற்று முன்தினம் இரவு பலத்த மழையால், அதிகபட்சமாக, 68 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. கோடை சீஸன் முடிந்து விட்ட போதிலும், திருச்சியில், பகலில் கடும் வெயில் இருந்து வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, 9.30 மணிக்கு லேசான தூரலுடன் பெய்யத்துவங்கிய மழை, 9.45 மணிக்கு வலுவடைந்தது. தொடர்ந்து, இரவு, 10.30 மணி வரை, மாவட்டத்தின் பல பகுதிகளில் மழை பெய்தது. இதில், நகரப்பகுதியில் பெய்த மழையால், கன்டொன்மென்ட், மத்திய பஸ் ஸ்டாண்ட், உறையூர், கருமண்டபம், பாலக்கரை போன்ற பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலப்புதூர் சுரங்கப்பாதை உள்பட, நகரின் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. இதனால், வாகனங்கள் அந்த வழியாக செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. மாநகரம் மட்டுமின்றி மாவட்டத்தில் இடியுடன் பெய்த மழையால், ஒரு சில இடங்களில் மின் தடை ஏற்பட்டது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்த மழை விவரம்

(மி.மீ.,யில்), லால்குடி, 29, புல்லம்பாடி, 23, துறையூர், 17, திருச்சி நகரம், 49, மருங்காபுரி, 44, நவலூர் குட்டப்பட்டு, 54, வாத்தலை அணைக்கட்டு, 68, பொன்மலை, 31, திருச்சி ஜங்ஷன், 42, தூவாக்குடி, 28 மழையளவு பதிவாகி உள்ளது.

## "கால்நடைக்கு தடுப்பூசி போடணும்': முகாமில் அதிகாரிகள் அறிவுறுத்தல்

கரூர்: ""கோமாரி நோய் தடுப் பூசியை, அனைத்து கால்நடைகளுக்கும் போட்டுக் கொள்ள வேண்டும்," என, கரூர் கலெக்டர் ஜெயந்தி கூறினார். கரூர் நகராட்சிக்குட்பட்ட எஸ்.வெள்ளாளப்பட்டியில், கால்நடை பராமரிப்புத்துறை மூலம், கோமாரி நோய் தடுப்பூசிக்கான, ஒன்பதாவது சுற்று முகாமில் கலெக்டர் ஜெயந்தி பேசியதாவது: கரூரில், ஒன்பதாவது சுற்றாக கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவக்கப்பட்டு கடந்த, 1ம் தேதி முதல், வரும், 21ம் தேதி வரை நடக்கிறது. அனைத்து கிராமம் மற்றும் குக்கிராமங்கள் என, 57 இடங்களில் சிறப்பு முகாம் நடக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் பசுவினம் மற்றும் எருமை இனங்களை கணக்கிட்டு அனைத்திற்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றன. தற்போது, மாவட்டத்தில் உள்ள ஒரு லட்சத்து, 88 ஆயிரத்து, 250 கால்நடைகளுக்கு வழங்க திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றனர். எனவே, தங்கள் பகுதியில் நடக்கும் கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு முகாமில், தங்கள் கால்நடைகளுக்கு கட்டாயம் தடுப்பூசி போட்டு, நோய் தாக்குதலில் இருந்து கால்நடைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நெல்லிக்காய் சாகுபடி: ஹெக்டேருக்கு ரூ.1.25 லட்சம் லாபம் பெறலாம்; தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் தகவல்**



நெல்லிக்காய் சாகுபடியில் ஒரு ஹெக்டேரில், ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.25 லட்சம் லாபம் பெறலாம் என சிவகங்கை மாவட்ட தோட்டக்கலைத் துறையின் துணை இயக்குநர் பி.கல்யாணசுந்தரம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: மருத்துவக் குணம் வாய்ந்த பெருநெல்லி வறட்சியான நிலங்களில் பயிரிடப்படும் முக்கியமான பழப்பயிராகும். நெல்லிக்காயில் அதிக அளவு வைட்டமின் சி (700 மி.கி.) சத்து உள்ளது. மேலும், நெல்லிக்காய்கள் ஆயுர் வேத மருத்துவ பொருள்களான சயவனபிராஸ், திரிபலா சூர்ணம், பிரம்ம ரசாயனம், கூந்தல் தைலங்கள் தயாரிப்பில் ஒரு முக்கிய மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

நெல்லி பயிர் ஒரு வெப்ப மண்டல பயிராகும். மழை அளவு 630 - 800 மி.மீ., வடிகால் வசதியுள்ள உள்ள இடங்களில் வறட்சியை தாங்கி வளரும். பனாரசி, என் ஏ 7, கிருஷ்ணா, சக்கயா, பி.எஸ்யஆர் ரகங்கள் தற்போது பயிர் செய்ய ஏற்ற ரகங்களாகும். விதை மூலம் உற்பத்தி செய்யும் நாற்றுகளைவிட மொட்டு கட்டு முறை அல்லது ஆப்பு ஒட்டு கட்டு முறையில் உற்பத்தி செய்யப்படும் ஒட்டுச் செடிகளை ஜூன், ஜூலை அல்லது செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 1 மீட்டர் நீள அகல, ஆழக்குழிகளில் 6 மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

இளஞ்செடிகள் வேர்ப்பிடித்து வளரும் வரை 4 நாள்களுக்கு ஒரு முறையும், பின்னர் தேவைக்கு ஏற்ப 10 நாள்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்சினாலே நன்கு வளர்ச்சி அடையும். நன்கு வளர்ந்த மரங்களுக்கு கோடைக் காலத்தில் மட்டும் நீர்ப்பாய்ச்சலாம். மேலும், சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 40- 50 சதவீதம் வரை நீரைச் சேமிக்கலாம்.

இளஞ்செடிகளுக்கு செடி ஒன்றுக்கு 20 கிலோ தொழு எருவும், காய்ப்பு மரங்களுக்கு 20 கிலோ தொழு உரமும், 1 கிலோ யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஷ் உரங்களை இரு சம பாகங்களாக பிரித்து ஜூன், அக்டோபர் மாதங்களில் இட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

நெல்லியின் தண்டுப் பகுதியைத் தாக்கும் தண்டு முடிச்சு பூச்சிகளை 2 மி மோனோகுரோட்டாபாஸ் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இருமுறை தெளித்து கட்டுப்படுத்தலாம். ஜூன், ஜூலை மாதங்களில் இலைகளைத் தாக்கும் துரு நோயைக் கட்டுப்படுத்த 2 கிராம் மாங்கோசெப் மருந்தை ஒரு லிட்டர் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும்.

காய்களில் தோன்றும் கரும்புள்ளிகள் குறைபாட்டை தடுக்க 6 கிராம் போராக்ஸ் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒட்டுச் செடிகள் நட்ட 4 முதல் 5 ஆண்டுகளில் காய்க்க தொடங்கும்.

நன்கு பராமரிக்கப்பட்ட மரம் ஒன்றில் இருந்து ஆண்டுக்கு 100 கிலோ மகசூல் கிடைக்கும். தற்போது சந்தையில் ஒரு கிலோ நெல்லிக்காய் ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேரில் சாகுபடி செலவை தவிர்த்து ஆண்டுக்கு ரூ.1.25 லட்சம் லாபம் கிடைக்கும் என்றார்.

"ஜூன், ஜூலை மாதங்களில் இலைகளைத் தாக்கும் துரு நோயை கட்டுப்படுத்த 2 கிராம் மாங்கோசெப் மருந்தை ஒரு லிட்டர் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும்.'

**அறுவடைக்குப் பிறகு சூரியகாந்தி விதைகளை உடனடியாக விற்கவும்: வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவுறுத்தல்**



சூரியகாந்தி விவசாயிகள், அறுவடைக்குப் பிறகு சூரியகாந்தி விதைகளை உடனடியாக விற்பனை செய்துவிடலாம் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தியாவின் முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களில் சூரியகாந்தி நான்காமிடம் வகிக்கிறது. இந்தியாவில், 2014-15 ஆம் ஆண்டில்

சூரியகாந்தி 3.83 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டு 2.53 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2013-14-ஆம் ஆண்டின் சூரியகாந்தியின் சாகுபடி பரப்பை விட 24 சதவீதமும், உற்பத்தியைவிட 36 சதவீதமும் குறைவு. சூரிய காந்தியை தமிழகம் தவிர கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிர மாநிலங்கள் அதிகளவில் உற்பத்தி செய்கின்றன. சூரியகாந்தி எண்ணெய் நாட்டின் தெற்கு, மேற்கு மாநிலங்களில் அதிக அளவில் நுகரப்படுகிறது. இந்தியாவில் மொத்த சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதியில் சென்னை துறைமுகம் வழியாக மட்டும் 64.30 சதவீதம் நடைபெறுகிறது. தமிழ்நாட்டில், 2014-15-ஆம் ஆண்டில் சூரியகாந்தி 0.07 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டு 0.05 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் எண்ணெய் பிழிதிறன் 35 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில், கரூர், தூத்துக்குடி, திருச்சி, திண்டுக்கல், விருதுநகர், அரியலூர் மாவட்டங்கள் மொத்த சூரியகாந்தி சாகுபடி பரப்பில் 81 சதவீதமும், உற்பத்தியில் 79 சதவீதமும் பங்களிக்கின்றன. தற்போது நல்ல தரமான சூரியகாந்தி விதையின் பண்ணை விலை, குவிண்டாலுக்கு ரூ. 3,400 முதல் ரூ. 3,500 வரை வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் விற்கப்படுகிறது. விவசாயிகள் சூரியகாந்தி விதைப்புக்கான முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, வேளாண் விற்பனைத் தகவல் - வணிக ஊக்குவிப்பு மையம், கடந்த 13 ஆண்டுகளாக வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சூரியகாந்தி விதையின் விலையை ஆராய்ந்தது. இதையடுத்து, சந்தை, பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், சூரியகாந்தி விதையின் பண்ணை விலை, செப்டம்பர் - அக்டோபர் மாதத்தில் குவிண்டாலுக்கு ரூ. 3,500 முதல் 3,600 வரை இருக்கும் என்று கணிக்கப்படுகிறது.

எனவே விவசாயிகள் அறுவடை செய்த சூரியகாந்தி விதையை உடனடியாக விற்பனை செய்யப் பரிந்துரைக்கப்படுகின்றனர். இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு - ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தையோ, எண்ணெய் வித்துகள் துறையையோ 0422-2431405, 2450812 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

**மதுரை, வாடிப்பட்டியில் திடீர் மழை**

மதுரையில் புதன்கிழமை இரவு காற்று, இடியுடன் திடீரென மழை பெய்தது.

மதுரையில் கடந்த ஒருவாரமாக வெயில் தாக்கம் அதிகமிருந்தது. இந்தநிலையில் புதன்கிழமை இரவு காற்று, இடி மின்னலுடன் மழை பெய்தது. ஊரகப்பகுதியில் மிதமான மழை பெய்த நிலையில் நகரில் தூறலாக மழை பெய்தது. இதனால் ஓரளவு வெப்பம் தணிந்தது.

வாடிப்பட்டி: வாடிப்பட்டி பகுதியில் தாதம்பட்டி, நீரேத்தான், குலசேகரன்கோட்டை, கச்சைகட்டி, பூச்சம்பட்டி, ஆண்டிபட்டி, கட்டக்குளம், வடுகபட்டி உள்பட பல கிராமங்களிலும் செவ்வாய்க்கிழமை இரவு சுமார் இரண்டு மணிநேரம் பலத்த மழை பெய்தது.

**சீமைக் கருவேல மரங்கள் அழிப்பு**

திருப்பூர் பி.வடுகபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் வளர்ந்திருந்த சீமைக் கருவேல மரங்கள் திருப்பூர் நிட் சிட்டி ரோட்டரி சங்கத்தின் முயற்சியால் புதன்கிழமை அழிக்கப்பட்டன.

பி.வடுகபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் சீமைக் கருவேல மரங்கள் அதிக அளவில் வளர்ந்திருந்தன.

இந்த மரங்கள், திருப்பூர் நிட் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பில் பொக்லைன் இயந்திரம் மூலம் அழிக்கப்பட்டன.

இப்பணியை திருப்பூர் நிட் சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் கோபால் தொடங்கி வைத்தார். முன்னாள் தலைவர்கள் ரவிச்சந்திரன், சங்கரநாராயணன், பிராகாஷ் குமார், செயலர் ராமலிங்கம், பொறுப்பாளர்கள் அன்பரசு. பாலுசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

பாரியூர் நஞ்சகவுண்டம்பாளையத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது.

முகாமை, திருப்பூர் மக்களவை உறுப்பினர் வி.சத்தியபாமா தொடங்கி வைத்தார். கோபி கோட்ட கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் டாக்டர் மணிசேகர் தலைமை வகித்தார். முகாமில், 150 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

இதில், ஈரோடு போலியோ நோய் ஆராய்ச்சிக் கூடத்தின் உதவி இயக்குநர்கள் டாக்டர் ஜெயலட்சுமி, சின்னசாமி, ஈரோடு சிறப்பு மருத்துவர் முருகன், கூகலூர் உதவி இயக்குநர் ரகுநாதன், டாக்டர் பிரபாகரன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**ரூ. 1. 09 கோடி கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1.09 கோடிக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 2,766 மூட்டைகளில் 1,35,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 79.25-க்கும், அதிகபட்சமாக ரூ. 81.10-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 51.60-க்கும், அதிகபட்சமாக ரூ. 78.60-க்கும் விற்பனையானது. மொத்தம், ரூ. 1.09 கோடிக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

**குன்னூரில் 500 டன் தேயிலை தூள் தேக்கம்**

லாரி ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம் காரணமாக, 500 டன் தேயிலைத் தூள்கள் தேக்கமடைந்துள்ளதாக தேயிலை பாரம் துக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது:

நீலகிரியில் உற்பத்தியாகும் தேயிலைகள் நாட்டின் பல பகுதிகளில் சந்தைப்படுத்தப்படுகிறது. வெளிநாடுகளான ரஷ்யா, ஈரான், ஈராக், எகிப்து, பாகிஸ்தான் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவது வழக்கம்.

நாளோன்றுக்கு 50 லாரிகளில் தேயிலை ஏற்றப்பட்டு பல இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஒரு லாரிக்கு 10 டன் வீதம் தேயிலை ஏற்றப்படுகிறது. தற்போது, லாரி ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம் காரணமாக குன்னூரில் உள்ள 22 தேயிலை குடோன்களில் 500 டன் தேயிலைத் தூள்கள் தேக்கமடைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்**

காவேரிப்பாக்கம் ஒன்றியம் அத்திப்பட்டு கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஹேமலதா தலைமை வகித்தார். காவேரிப்பாக்கம் வேளாண்மை உதவி இயக்குநர் ஸ்டீபன் ஜெயகுமார் முன்னிலை வகித்தார்.

தேயர் நிறுவனங்களின் அதிகாரிகள் யுதப், முத்தையன், வேளாண்மை அலுவலர் லீலாவதி ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி முறையில் இயந்திரம் மூலம் நடவு செய்வதால் ஏற்படும் நன்மைகள், அதற்கான அரசின் மானியங்களைப் பெறுவது, இதன் மூலம் ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரத்தை அரசிடம் இருந்து மானியமாகப் பெறுவது உள்ளிட்டவை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி விதை அலுவலர் சேகர், உதவி வேளாண்மை அலுவலர் செல்வகுமார் ஆகியோர் செய்திருந்தனர். ஆத்மா உதவி தொழில் நுட்ப வல்லுநர் ராஜா நன்றி கூறினார்.

**கால்வாயைக் காணவில்லை: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் புகார்**

ஆரணி அருகே அடையபுலம் பகுதியில் இருந்த பக்க கால்வாய், ஆக்கிரமிப்புகளால் காணாமல் போய்விட்டதாக குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வட்டாட்சியர் தாமோதரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாவட்ட சமூக நலத்துறை தனித் துணை ஆட்சியர் ஜோதி கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்தார்.

அப்போது விவசாயிகள் பேசியது: அடையபுலம் ஊராட்சி என்.கே. தாங்கல் பெரிய ஏரி, சின்ன ஏரி ஆகியவற்றின் வரத்துக் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என வட்டாட்சியரிடம் புகார் தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அடையபுலம் கருணீகர் தெருவில் பக்க கால்வாய் கட்டுவதற்கு 4 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், கால்வாயைச் சரியாகக் கட்டாமல் தற்போது கால்வாய் இருப்பதே தெரியவில்லை.ஆகையால், காணாமல்போன கால்வாயைக் கண்டுபிடித்துத் தர வேண்டும்.

கூட்டத்தில் வட்ட வழங்கல் அலுவலர் கோபால், இடர்பாடு நிவாரண வட்டாட்சியர் சுரேஷ், நெடுஞ்சாலைத் துறை அலுவலர் மணி, வேளாண் உதவி இயக்குநர்கள் ஏ.எம். சாந்தி, சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நெல் இயந்திர நடவு செயல் விளக்கம்**

செய்யாறை அடுத்த தண்டபப்ந்தாங்கல் கிராமத்தில் நெல் இயந்திர நடவு செயல் விளக்க விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமில் வெம்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கோ. பாண்டியன் கலந்து கொண்டு நெல் இயந்திர நடவு செயல் விளக்கத்தை விவசாயிகளிடையே செய்து காட்டினார்.

அப்போது விதைச் செலவு குறைவு, 14 நாள்கள் வயது கொண்ட நாற்றுகளை நடுவதால் மகசூல் அதிகரிப்பு, வரிசை நடவு செய்தால் களை அமுக்கும் கருவி கொண்டு களைகளை எளிதாக எடுக்கும் வசதி, நடவு செய்யும் செலவை வெகுவாகக் குறைப்பது, இயந்திர நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 3 ஆயிரம் வீதம் அரசு மானியம் வழங்குவது குறித்து விளக்கம் அளித்தார். முகாமில் தண்டப்பந்தாங்கல், பெருமாந்தாங்கல், வடணப்பாக்கம், மோரணம், மேல்பூதேரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முகாமுக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் க. முருகன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிவசங்கர், உதவி விதை அலுவலர்கள் கோ. ராஜ்குமார், க. தங்கராஜ், தொழில்நுட்ப மேலாளர்கள் சு. நடராஜன், மு. பழனி ஆகியோர் செய்திருந்தனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

தமிழக அரசின் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் இளம்பிள்ளை அருகேயுள்ள பெருமாகவுண்டம்பட்டி ஊராட்சிக்குள்பட்ட மண்கரடு கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.

கால்நடை மருத்துவர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் முகாமில் 500-க்கும் மேற்பட்ட ஆடு, மாடுகளுக் செயற்கைமுறை கருவூட்டல், தடுப்பூசி போடுதல், சினைப் பரிசோதனை, குடற்புழு நீக்கம், கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய் தடுப்பூசி மற்றும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டன.

முகாமில் மருத்துவர்கள் பரணிதரன், வாசுதேவன், ஊராட்சி மன்றத்தலைவர் அழகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முகாமில் சிறந்த கால்நடைகளுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**குமரியில் கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்: ஆட்சியர் தொடங்கிவைத்தார்**

குமரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் தொடங்கிவைத்தார்.

தமிழகத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில், 9ஆவது கட்ட கோமாரி நோய் தடுப்பூசி முகாம் செப்டம்பர் 1 முதல் 21 நாள்கள் வரை சுமார் 88 லட்சம் கால்நடைகளுக்கு போடப்படவுள்ளது. அதனடிப்படையில் குமரி மாவட்டத்தில் சுமார் 70 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் வீடுவீடாகச் சென்று போடப்படவுள்ளது. இந்த முகாமை மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் தொடங்கி வைத்து பேசியதாவது:

கிராமப்புற விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அனைத்து கிராமங்களிலும் 31.8.2015 அன்று சிறப்பு கிராமசபைக் கூட்டங்கள் நடத்தி கோமாரி நோயினால் கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பொருளாதார இழப்பு மற்றும் தடுப்பூசி போடுவதின் முக்கியத்துவத்தை கால்நடைத் துறை அலுவலர்கள் மூலம் கிராம மக்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் அறியும் வண்ணம் எடுத்துக் கூறப்பட்டது.

இதனடிப்படையில், கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணிகள் செவ்வாய்க்கிழமை (செப்.1) இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கால்நடை வளர்ப்போர்கள் தங்களது அருகில் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களை அணுகி, தங்களது கிராமங்களில் தடுப்பூசி போடும் தேதிகளை அறிந்து அன்றைய தினம் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் எஸ். சங்கரசுப்ரமணியன், உதவி இயக்குநர்கள் ஆ. தயாசேகர், இரா.ரிச்சர்டுராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வறட்சியை தாங்கி வளரும் 501 ரக விதை சோளம் தட்டுப்பாடு: வெளிச்சந்தைகளில் பதுக்கல் என விவசாயிகள் குற்றச்சாட்டு**

தென் தமிழகத்தில் கரிசல்காட்டு பூமியில் மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற தானியப் பயிரான 501 ரக விதை சோளத்திற்கு வெளிச்சந்தைகளில் செயற்கையான தட்டுப்பாடு நிலவுவதாகவும், பருவமழையை எதிர்நோக்கி கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய கிடங்குகளில் அவை பதுக்கிவைக்கப்பட்டிருப்பதாகவும் விளாத்திகுளம் வட்டார மானாவாரி விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையம் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்டு, மத்திய ஆராய்ச்சி கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட 501 ரக சோள விதைகள் எந்தவிதமான வறட்சியையும் தாங்கி குறுகிய காலத்தில் 7 அடி உயரத்துடன் வளரக்கூடியதும், அதிக மகசூல் தரக் கூடியதுமாகும்.

இதனால் இந்த ரக சோளத்தை பெரும்பாலான மானாவாரி விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி பயிரிட்டு நல்ல மகசூல் பெற்று வந்தனர். உரக்கடைகளில் 3 கிலோ எடை கொண்ட விதை சோளம் உள்ளடக்கிய ஒரு பை ரூ.420-க்கு விற்பனையாகி வந்தது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், கடம்பூர், கயத்தாறு, கழுகுமலை, கோவில்பட்டி, விளாத்திகுளம், எட்டயபுரம், நாகலாபுரம், புதூர் ஆகிய வட்டாரங்களில் சுமார் 1 லட்சம் ஏக்கர் பரப்பளவில் புரட்டாசி பட்டத்தை முன்னிட்டு செப்டம்பர் மாதத்தில் 501 ரக சோளத்திற்கான சாகுபடி பணிகளை விவசாயிகள் தொடங்குவது வழக்கம்.

நிகழாண்டில் சோளம் சாகுபடியை முன்னிட்டு விதை நடவு செய்வதற்காக விவசாயிகள் 501 ரக விதை சோளங்களை உரக்கடைகளில் வாங்க செல்கையில், பெரும்பாலான விவசாயிகளுக்கு குறிப்பிட்ட ரக விதை சோளம் கிடைக்கவில்லை. போதிய அளவில் விதை சோளம் இருப்பு இருந்தும் கிடைக்காததால் விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

சேலம், கோயம்புத்தூர், திருச்சி, கரூர், திருப்பூர், நாமக்கல் மாவட்டங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு கிடங்குகளில் டன் கணக்கில் 501 ரக விதை சோளங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும், பருவமழையை எதிர்நோக்கி கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதற்காக அவற்றை பதுக்கிவைத்து செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருப்பதாகவும் குற்றம்சாட்டுகின்றனர் மானாவாரி விவசாயிகள்.

தமிழகத்தில் கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, வரகு, குதிரைவாலி, பனிவரகு, மக்காச்சோளம் உள்ளிட்ட 9 வகை சிறு தானியங்களின் சாகுபடி பரப்பளவு கடந்த நான்கு ஆண்டுகளாக கணிசமாக அதிகரித்து வருகிறது. நிகழாண்டில் அரசு நிர்ணயித்துள்ள சாகுபடி பரப்பளவின் இலக்கை அடைய, உரிய பருவநிலை சூழலில் சோளம் சாகுபடி நடைபெற விவசாயிகளுக்கு விதை சோளம் எளிமையான முறையில் தாராளமாக கிடைக்கவும், நியாயமான விலையில் பெறுவதற்கும் மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விளாத்திகுளம் வட்டார மானாவாரி விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து வடமலாபுரம் கிராம மானாவாரி விவசாயி வரதன் கூறியதாவது: அடுத்த சில வாரங்களில் பருவமழை பெய்தால் விவசாயிகளிடம் குறிப்பிட்ட ரக சோள விதைக்கு கடும் கிராக்கி ஏற்படும் எனக் கருதி, நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு விற்று லாபம் அடையும் நோக்கில் உரக்கடைகளில் பதுக்கல் நடைபெற்று வருகிறது. கடந்த காலங்களில் இதுபோன்ற தட்டுப்பாடு என்பது குறைந்த அளவில் இருந்து வந்தது. நிகழாண்டில் விதை சோளத்தில் 100 சதவீத தட்டுப்பாடு என்ற நிலை உருவாகிவிட்டது.

சோளம் சாகுபடி பரப்பளவு பெருமளவில் குறைந்துபோகாமல் இருக்க வெளிச்சந்தைகளில் விதைசோளம் பதுக்கலை அதிகாரிகள் உடனடியாக தடை செய்ய வேண்டும். நல்ல விளைச்சலை தரக்கூடிய குறிப்பிட்ட ரக விதைசோளம் முறைகேடுகள் இன்றி விற்பனை செய்யப்படுவதை உறுதிப்படுத்த விவசாயிகளுக்கு ரசீது தரவேண்டும் என்றார் அவர்.

**பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் 1,000 கனஅடி தண்ணீர் திறப்பு!**

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களின் பாசனத் தேவைக்காக மணிமுத்தாறு, பாபநாசம் அணைகளிலிருந்து புதன்கிழமை 1,000 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

நிகழாண்டில் தென்மேற்குப் பருவமழை குறைந்து, நீர்வரத்து இல்லாததால் பிரதான அணைகளின் நீர் இருப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது. இதனிடையே, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர், பாசனத் தேவையைக் கருத்தில் கொண்டு இன்னும் ஒரு மாதத்துக்கு சாகுபடிக்கு தண்ணீர் வழங்கிய வேண்டிய நிலையில் 700 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

அணைகளின் நீர்இருப்பு கவலையளிக்கும் வகையில் இருப்பதால் ஒரு மாத பாசனத் தேவை, வடகிழக்குப் பருவமழை நவம்பரில் தொடங்கி அணைகளுக்கு நீர்வரத்து கிடைக்கும்வரை இவ்விரு மாவட்ட மக்களின்

குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் குறைந்த அளவில் தண்ணீர் திறக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது நெற்பயிர்கள் கதிர்பிடிக்கும் பருவத்தில் இருப்பதால் பாசனத்துக்குக் கூடுதல் தண்ணீர் வழங்க வேண்டி பாபநாசம், மணிமுத்தாறு அணைகளிலிருந்து புதன்கிழமை 1,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டதாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன.

புதன்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 121 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 24 கனஅடியும், கடனாநதி அணைக்கு 46 கனஅடியும், ராமநதி அணைக்கு 21 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

**வேளாண் மாணவிகள் களப்பயிற்சி**

பண்ருட்டி, அண்ணாகிராமம் வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள நெல் அனுசரணை ஆராய்ச்சித் திடலை வேளாண் கல்லூரி மாணவிகள் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர்.

பெரம்பலூர், தந்தை ரோவர் வேளாண்மைக் கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவிகள் 10 பேர் அண்ணாகிராமம் வட்டாரத்தில் களப்பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள், எம்.ஏரிப்பாளையம் கிராமத்தில் விவசாயி வெங்கடேசன் வயலில் அமைக்கப்பட்டுள்ள நெல் அனுசரணை ஆராய்ச்சித் திடலைப் பார்வையிட்டனர்.

இந்த வயலில், நான்கு ஒப்பீட்டு ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இவற்றின் உயிரியல் காரணிகளான தூர்களின் எண்ணிக்கை, பூச்சி, நோய் தாக்குதல் போன்றவற்றை ஆய்வு செய்தனர்.

அண்ணாகிராமம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சீ.இளவரசன், வேளாண்மை அலுவலர் அ.சந்திரராசு ஆகியோர் மாணவிகளுக்கு அனுசரணை ஆராய்ச்சி திடல் குறித்து விளக்கமளித்தனர். உதவி வேளாண்மை அலுவலர் பாஸ்கல்ராஜ் உடனிருந்தார்.

**மானிய விலையில் சம்பா நெல் விதைகள்**

சிதம்பரம், பின்னத்தூர், பரங்கிப்பேட்டை பகுதிகளில் உள்ள வட்டார விரிவாக்க மையங்களில் சம்பா பருவத்துக்கேற்ற புதிய நெல் ரகங்கள் மானிய நிலையில் விவசாயிகளுக்கு விநோயகம் செய்யப்படுகிறது என பரங்கிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் சு.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மானிய விலையில் சம்பா பருவத்துக்கேற்ற புதிய நெல் ரகங்கள் தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தின் கீழ் (2015-16) விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இதில் சகத 34449, அஈப(த) 49, இர்(த) 50, சுவர்ணா சப்-1 ஆகியவை போதிய அளவில் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பில் வைத்து, கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியத்தில் விநியோகிக்கப்படுகிறது.

மேலும் ஆடப 5204, அஈப 39, பொன்னி, இஞ43 போன்ற நெல் ரகங்களின் விதை கிராமத் திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி மானிய விலையில் விதைகளைப் பெற்று பயன்பெறலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**சென்னை, புறநகர் பகுதிகளில் உள்ள பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் வெங்காயம் விலை கிலோ ரூ.55 ஜெயலலிதா உத்தரவு**



சென்னை,

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் வெங்காயம் கிலோ ஒன்றிற்கு 55 ரூபாய்க்கு விற்பனை செய்ய ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:–

பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்

வெளிச்சந்தையில் உயர்ந்து வந்த காய்கறிகளின் விலையினைக் கட்டுப்படுத்தும் வகையிலும், விவசாயிகள் தமது விளை பொருள்களுக்கு நல்ல விலை பெற்றிடவும், ஏழை எளிய நடுத்தர மக்கள் தரமான காய்கறிகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறும் வகையில், விவசாயிகளையும் நுகர்வோர்களையும் இணைக்கக்கூடிய மக்கள் சேவைத் திட்டமான பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதாவால் கடந்த 2013–ம் ஆண்டு ஜூன் 20–ந் தேதி அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அதிக அளவில் வெங்காயம் கொள்முதல்

தற்போது தமிழ்நாட்டில் 58 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக தரமான காய்கறிகள் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. சென்னையில் இரண்டு நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் உள்ளன.

2013–ம் ஆண்டு வெங்காயத்தின் விலை மிக அதிகமாக உயர்ந்த போது, முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களிலிருந்து அதிக அளவில் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின் வாயிலாக குறைந்த விலையில் தரமான வெங்காயம், தங்கு தடையின்றி நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டது.

ரூ.55–க்கு விற்பனை

தற்போது, பருவநிலை மாறுதலால் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக, வெங்காயத்தின் விளைச்சல் குறைந்ததால் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகிறது. எனவே, இந்த விலையேற்றத்தின் காரணமாக பொதுமக்கள் பாதிப்படையாமல் இருக்கும் வகையில் வெங்காய விலையேற்றத்தினை கட்டுப்படுத்த வெளி மாநிலங்களிலிருந்து வெங்காயம் கொள்முதல் செய்து, பண்ணை பசுமை

நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், நுகர்வோர்களுக்கு தேவையான அளவு வெங்காயம் வெளிச்சந்தையை விட குறைந்த விலையில் தங்கு தடையின்றி வழங்குவதற்காக கர்நாடக மாநிலம் யஷ்வந்த்பூர் பகுதியிலிருந்தும், மகாராஷ்டிரா மாநிலம் லாசல்கான் பகுதியிலிருந்தும் கூடுதலாக பெரிய வெங்காயம் கொள்முதல் செய்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 42 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக கிலோ 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

<u>குறைவான விலையில் வெங்காயம்</u>

முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி செயல்படுத்தப்படும் இந்த நடவடிக்கை மூலம் தனியார் விற்பனை நிலையங்களில் 70 ரூபாய் வரை விற்கப்படும் வெங்காயத்தின் விலையை விட குறைவான விலையில் வெங்காயம் பொதுமக்களுக்கு கிடைக்க வழி வகை ஏற்பட்டுள்ளது.

முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் நடவடிக்கையின் காரணமாக வெங்காயம் குறைந்த விலையில் நுகர்வோர்களுக்கு பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தங்கு தடையின்றி கிடைப்பதற்கும், தேவைக்கு ஏற்ப, கூடுதல் வெங்காயம் வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.  இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விளைச்சல், வரத்து அதிகரிப்பு: கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை குறைந்தது தக்காளி கிலோ– ரூ.10, அவரை– ரூ.20, பீன்ஸ்– ரூ.30, சாம்பார் வெங்காயம்– ரூ.40**



சென்னை,

விளைச்சல்–வரத்து அதிகரிப்பு காரணமாக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை குறைந்துள்ளது. தக்காளி கிலோ ரூ.10–க்கும், அவரை ரூ.20–க்கும், பீன்ஸ் ரூ.30–க்கும், சாம்பார் வெங்காயம் ரூ.40–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

<u>காய்கறிகள் விலை</u>

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த மாத தொடக்கத்தில் காய்கறிகள் விலை உயர்ந்து காணப்பட்டது. முகூர்த்த நாட்களை முன்னிட்டு அனைத்து காய்கறிகள் விலையும் அதிகரித்தது. தொடர்ந்து இந்தநிலை நீட்டிப்பால் காய்கறி விலை நிலவரத்தில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை.

கடந்த வாரத்தில் பெரிய வெங்காயம் விலை கிலோவுக்கு ரூ.80 வரை விற்பனை செய்யப்பட்டது. முகூர்த்த நாளையொட்டி பல்லாரி வெங்காயம் (நாசிக்) மற்றும் ஆந்திரா வெங்காயத்தின் விலையும் அதிகரித்து இருந்தது.

விளைச்சல் மற்றும் வரத்து அதிகரிப்பு காரணமாக வெங்காயம் விலை குறைய தொடங்கியுள்ளது. கடந்த வாரம் ரூ.80–க்கு விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம், விலை சரிந்து மீண்டும் ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பீன்ஸ், அவரை, தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் விலையும் குறைந்துள்ளது.

இதுகுறித்து சென்னை கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் சங்க செயலாளர் அப்துல் காதர் கூறியதாவது:–

<u>குறைய வாய்ப்பு</u>

விளைச்சல்–வரத்து அதிகரிப்பு காரணமாக கோயம்பேடு மார்க்கெட்டில் கூடுதல் லாரிகள் மூலம் காய்கறிகள் வந்து கொண்டிருக்கிறது. முகூர்த்த நாட்களும் அதிகம் இல்லாத காரணத்தால் பெரும்பாலான காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது.

குறிப்பாக பெரிய வெங்காயத்தின் விலை வெகுவாக குறைந்து வருகிறது. 50 லாரிகள் மூலம் கொண்டுவரப்பட்ட சரக்குகள், தற்போது 60 லாரிகள் முதல் 70 லாரிகள் வரை அதிகரிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக தக்காளி, பீன்ஸ், அவரை உள்ளிட்ட பெரும்பாலான காய்கறிகளின் விலையும் சரிந்து உள்ளது. குறிப்பாக கடந்த வாரத்தில் ஒரு கிலோ ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்ட பீன்ஸ், தற்போது ரூ.30–க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.15–க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி விலை குறைந்து ரூ.10–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வரத்து அதிகரிப்பு காரணமாக இனி வரக்கூடிய நாட்களில் காய்கறிகள் விலை குறையவே வாய்ப்பு இருக்கிறது.

<u>விலை நிலவரம்</u>

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகள் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:–

உருளைக்கிழங்கு – ரூ.15, மராட்டிய பல்லாரி வெங்காயம் – ரூ.60 முதல் 70 வரை, ஆந்திரா பல்லாரி வெங்காயம் – ரூ.40 முதல் ரூ.50 வரை, பீன்ஸ் – ரூ.30, கேரட் – ரூ.25, நூக்கல் – ரூ.20, சவ்சவ் – ரூ.20, முட்டைக்கோஸ் – ரூ.15, மிளகாய் – ரூ.20 முதல் ரூ.25 வரை, சேப்பக்கிழங்கு – ரூ.20 முதல் ரூ.25 வரை, சேனைக்கிழங்கு – ரூ.20 முதல் ரூ.25 வரை, கத்தரிக்காய் – ரூ.10 முதல் ரூ.15 வரை, வெண்டைக்காய் – ரூ.15, அவரைக்காய் – ரூ.20, கோவைக்காய் – ரூ.15, கொத்தவரங்காய் – ரூ.20 முதல் ரூ.25 வரை, பாகற்காய் – ரூ.30, முருங்கைக்காய் – ரூ.30, பச்சைப்பட்டாணி – ரூ.60 முதல் 70 வரை, தக்காளி – ரூ.10, சாம்பார் வெங்காயம் – ரூ.40, காலிபிளவர் – ரூ.25 முதல் ரூ.30 வரை, புடலங்காய் – ரூ.20, சுரைக்காய் – ரூ.15, பீர்க்கங்காய் – ரூ.25, தேங்காய் – ரூ.20, வாழைக்காய் (காய் ஒன்று) – ரூ.5. இவ்வாறு அவர் கூறினார்.

## ஒரே நாளில் 17ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி கலெக்டர் தகவல்

கடலூர்,

கடலூர் மாவட்டத்தில் ஒரே நாளில் 17 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக கலெக்டர் சுரேஷ்குமார் தெரிவித்தார்.

தடுப்பூசி முகாம்

கால்நடை பராமரிப்புதுறையின் சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கடலூர் அருகே உள்ள காராமணிக்குப்பம் கிராமத்தில் நடைபெற்றது. இதில் கால்நடைபராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் ராஜாசிதம்பரம் ஒரு பசுமாட்டுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு முகாமை தொடங்கி வைத்தார். இதில் டாக்டர் சுமதி, கோட்ட உதவி

இயக்குநர் டாக்டர் மோகன், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் ராகவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதைத் தொடர்ந்து டாக்டர் முருகவேணி தலைமையில் கால்நடை ஆய்வாளர் ஏழுமலை, வீரகுமார், அன்பழகன், வசந்தா, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மனோன்மணி, லலிதா ஆகியோரை கொண்ட குழுவினர் முகாமுக்கு அழைத்து வரப்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். அதேபோல வரக்கால் பட்டு கிராமத்திலும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. 2 இடங்களில் நடைபெற்ற முகாம்களில் 200 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டன.

<u>கிழக்கு ராமாபுரம்</u>

கிழக்கு ராமாபுரத்தில் நடைபெற்ற முகாமில் டாக்டர் ஸ்டாலின் வேதமாணிக்கம் தலைமையில் கால்நடை ஆய்வாளர் ஆறுமுகம், கிருஷ்ணமூர்த்தி, உதவியாளர் ஆரோக்கியசாமி ஆகியோரை கொண்ட குழுவினர் 398 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

அதேபோல கண்ணாரப்பேட்டை, கே.புதூர், காரைக்காடு காலனி, மணக்கும் ஆகிய இடங்களில் நடைபெற்ற முகாமில் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் நிக்சன் தலைமையில் ரமேஷ், சக்திவேல், லட்சுமி, ஓய்வுபெற்ற கால்நடை ஆய்வாளர் ராஜமச்சேந்திர சோழன் ஆகியோரை கொண்ட குழுவினர் 356 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். இது தவிர மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற முகாம்களில் விவசாயிகள் தங்கள் மாடுகள், எருதுகள், எருமைகள் மற்றும் கன்றுகள் ஆகியவற்றுக்கு தடுப்பூசி போட்டுக்கொண்டனர். இந்த முகாம் வருகிற 21–ந் தேதி வரை தொடர்ந்து நடக்கிறது.

<u>17,750 கால்நடைகளுக்கு</u>

இந்த நிலையில் கடலூர் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கடலூர் மாவட்டத்தில் கோமாரி

நோய் தடுப்பூசி முகாம் நேற்று தொடங்கப்பட்டுள்ளது. விவசாய பெருமக்கள் தங்களது பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் 4 மாதத்துக்கு மேற்பட்ட இளங்கன்றுகளை முகாமுக்கு அழைத்து வந்து கால் மற்றும் வாய்கோமாரி நோய் தடுப்பூசியை போட்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். முதல்நாளில் மட்டும் 17 ஆயிரத்து 750 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்**



மாரவாடி கிராமத்தில் தொடர்ந்து 21-நாட்கள் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமை கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்.

கோமாரிநோய் தடுப்பூசி

தர்மபுரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடும் முகாம் பல்வேறு கிராமங்களில் நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக 9-ம் சுற்று கோமாரிநோய் தடுப்பூசி போடும் முகாம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் நடைபெற்று வருகிறது. தர்மபுரி ஒன்றியம் கோணங்கிநாயக்கனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட மாரவாடி கிராமத்தில் கால்நடைகளுக்கு தொடர்ந்து 21 நாட்களுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடும் முகாம் தொடங்கியது. இந்த முகாமை கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்.

அப்போது கலெக்டர் விவேகானந்தன் பேசியதாவது:-

தர்மபுரி மாவட்டத்தில் மொத்தம் 3 லட்சத்து 59 ஆயிரத்து 100 மாடுகள் உள்ளன. இவைகளுக்கு கோமாரிநோய் வராமல் தடுக்க தேசிய கோமாரிநோய் தடுப்பு திட்டத்தின் கீழ் மொத்தம் 3 லட்சத்து 59 ஆயிரத்து 100 டோஸ்கள் கோமாரிநோய் தடுப்பூசி மருந்துகள் தமிழக அரசால் வழங்கப்பட்டு உள்ளன. மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் 21 நாட்கள் தொடர்ந்து சிறப்பு முகாம்கள் மூலம் கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது. இந்த பணிக்காக பல்வேறு மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார இழப்பு

கோமாரி நோய் மிகவும் கொடிய நோய் ஆகும். இந்த நோய் மழைக்காலங்களில் மிகவும் வேகமாக பரவக்கூடியது. பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த நோய் தாக்கிய பசுக்கள், பசுமாடுகளின் பால் உற்பத்தியும், எருதுகளின் வேலைத்திறனும்

குறைந்துவிடும். சிகிச்சைக்கு பின் நோயில் இருந்து குணமான மாடுகளுக்கு வெப்பம் தாளாமை, மலடு போன்ற பாதிப்புகள் ஏற்படும். நோய் எதிர்ப்புத்திறன் குறைவாக உள்ள மாடுகள் இறக்க நேரிடும். நோய்த்தாக்குதலுக்கு உள்ளான மாடுகளின் பாலை பருகும் கன்று குட்டிகளும் இறந்து விடும். எனவே விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் விவேகானந்தன் கூறினார்.

இந்த முகாமில் மொத்தம் 395 மாடுகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டது. முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் சீனிவாசன், உதவி இயக்குனர் டாக்டர் இளங்கோவன், கால்நடைநோய் புலனாய்வு பிரிவு இயக்குனர் ஜெகந்நாதன், கால்நடை உதவி மருத்துவர்கள் இளையபாரதி, சரவணசெல்வன், ஜெரோம்சார்லஸ் மற்றும் உதவி மருத்துவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஊராட்சி தலைவர் மல்லிகா கிருஷ்ணன் நன்றி கூறினார்.

**பாலாறு–பொருந்தலாறு அணையில் நீர்மட்டம் சரிவு பழனி நகருக்கு குடிநீர் தட்டுப்பாடு அபாயம்**



பழனி,

பழனி பாலாறு– பொருந்தலாறு அணையில் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. இதனால் பழனி நகருக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது.

பாலாறு– பொருந்தலாறு அணை

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அணைகளில் பாலாறு–பொருந்தலாறு அணை மிகப்பெரியதாகும். 65 அடி உயரமுள்ள இந்த அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் விவசாயத்திற்கும், பழனி நகர மக்களின் குடிநீர் தேவைக்கும் பயன்படுத்தப்படுகிறது. தற்போது உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.3 கோடியே 98 லட்சம் செலவில் அணை புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

தற்போது பழனி பகுதிகளில் மழை இல்லாததால் அணையின் நீர்மட்டம் 28 அடியாக உள்ளது. அணையில் இருந்து விவசாய தேவைக்கு தினமும் தாடாகுளம் மதகு மூலம் 15 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் நீர்மட்டத்தில் தொடர்ந்து சரிவு ஏற்பட்டு வருவதால் பழனி நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது.

குடிநீர் வினியோகம் பாதிப்பு

இதுகுறித்து பழனி நகரசபை தலைவர் வேலுமணியிடம் கேட்டபோது, ‘பழனி நகருக்கு கோடைகால நீர்தேக்கத்தில் இருந்தும், பாலாறு–பொருந்தலாறு அணையில் இருந்தும் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. பழனி, கொடைக்கானல் பகுதிகளில் மழை சரிவர பெய்யவில்லை. இதனால் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. குடிநீருக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய பொதுப்பணித்துறையினர் தற்போது தாடாகுளம் மதகில் விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விட்டுள்ளனர். இதனால் பழனி நகரில் 10 வார்டுகளுக்கு குடிநீர் வினியோகம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டு உள்ளது’ என்றார்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, ‘தாடாகுளம் மதகில் தினமும் 15 கனஅடி தண்ணீர் விவசாயத்திற்கு திறந்து விடப்படுகிறது. இன்னும் 20 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். அவ்வாறு தண்ணீர் வெளியேறினாலும் 17 அடி தண்ணீர் இருப்பு வைக்கப்படும். ஆதலால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை’ என்றார்.

**கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை தடுக்க தடுப்பூசி அவசியம்**



கால்நடைகளை தாக்கும் கொடிய நோய்களில் முக்கியமானது கோமாரி நோய். இந்த நோயை கிராமப்புறங்களில் கால்நோய், வாய்நோய், கால்கட்டு, வாய்ச்சப்பை என்றும் அழைப்பார்கள். அதிவேகமாக பரவக்கூடிய இந்த நோயானது பிளவுபட்ட கால் குளம்புகளை கொண்ட அனைத்து கால்நடைகளையும் தாக்கும். முக்கியமாக ஆடு, எருமை, கலப்பின மற்றும் உயர்தர பசு மாடுகளை அதிகமாக தாக்குகிறது.

இதனால் கால்நடை வளர்ப்பவர்களுக்கு அதிகமான பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

<u>நோயின் அறிகுறிகள்</u>

இந்த நோயானது பிக்கோர்னா எனப்படும் மிகச்சிறிய நச்சுயிரியினால் ஏற்படுகிறது. நோய் தாக்கிய கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம், தீவனம், காற்று மூலம் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது. காற்றில் ஈரப்பதம் அதிகமாக உள்ள குளிர் மற்றும் பனிக்காலங்களில் வேகமாக பரவும். இந்த நச்சுயிரி தாக்கிய 6 முதல் 8 நாட்களுக்குள் பாதிப்பு தெரிய தொடங்கும். கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளில் காணப்படும் அறிகுறிகள் பின்வருமாறு:–

மிக அதிகமாக காய்ச்சல்(40 முதல் 45 டிகிரி செல்சியஸ்), அசைபோடாதிருத்தல், சோர்ந்து காணப்படுதல், உரோம சிலிர்ப்பு, பாலின் அளவு குறைதல், உதடு தடித்தும், நாக்கினை வெளியில் நீட்டியபடி வாயில் நுரை போல் எச்சில் ஒழுகி கொண்டே இருத்தல், மாடுகள் நாக்கை சப்பிக்கொண்டு இருத்தல் போன்றவையாகும். மேற்கண்ட அறிகுறிகளுக்குப்பின் வாயினை திறந்து பார்த்தால் வாயின் உட்புறமும், நாக்கின் ஓரமும், ஈறிலும் ஒரே சிவப்பாகவும் தோல் உரிந்த புண்களும், கொப்புளங்களும் தென்படும்.

நோய் தாக்கிய கறவை மாடுகளுக்கு எளிதில் மடிவீக்க நோய் மற்றும் சூலகப்பகுதி பாதிக்கப்படுவதால் சினைப்பிடிப்பது கடினமாகும். இதனால் பால் உற்பத்தி குறைந்து பொருளாதார இழப்பை ஏற்படுத்தும். காளை மாடுகளில் இனவிருத்தி திறன் குறைந்துவிடும்.

<u>கட்டுப்படுத்தும் முறைகள்</u>

கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு ஓட்டி செல்லக்கூடாது. புதிதாக கால்நடைகளை வாங்கும்போது அவற்றினை 3 வாரங்களுக்கு மற்ற கால்நடைகளுடன் சேர்க்காமல் தனியே வைத்து பராமரிக்க வேண்டும். இந்த நோயை உருவாக்கும் நச்சுயிரி, 7 வகைகளையும் 68 துணை வகைகளையும்

கொண்டுள்ளதால், இந்நோயை கட்டுப்படுத்துவது கடினம். எனவே பண்ணையாளர்கள், கால்நடைகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட காலங்களில் ஒருங்கிணைந்த முறையில் தடுப்பூசி போட வேண்டும்.

பொதுவாக பிறந்த கன்றுகளுக்கு முதலாவது தடுப்பூசி நான்காவது மாதத்திலும், இரண்டாவது தடுப்பூசி 5–வது மாதத்திலும் போட வேண்டும். வளர்ந்த கால்நடைகளுக்கு ஒவ்வொரு 4 முதல் 6 மாதத்திற்கு ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும். இந்த தடுப்பூசி போட்ட மாடுகளில் கோமாரி நோய்க்கு எதிரான, நோய் எதிர்ப்பு திறன் உண்டாக 21 நாட்கள் ஆகும். ஒரு கிராமத்தில் தடுப்பூசி போடும்போது, அந்த இடத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும்.

<u>தடுப்பூசி முகாம்</u>

இந்த நோயை கட்டுப்படுத்த தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் வருடத்திற்கு இரண்டு முறை கோமாரி நோய் தடுப்பூசி இலவசமாக போடப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் கால்நடை டாக்டர்கள் நேரடியாக சென்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமை நடத்தி வருகிறார்கள். அதன்படி தமிழகம் முழுவதும் 2–ம் கட்டமாக கடந்த 1–ந்தேதி முதல் வருகிற 21– ந்தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது. எனவே கால்நடை வளர்ப்போர் தங்களது கிராமங்களில் நடைபெறும் முகாமில் தவறாமல் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த தகவலை திண்டுக்கல் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் டாக்டர் சிவசீலன், உதவி பேராசிரியர் விஜயக்குமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமில் பசுமாடுகளை சிறப்பாக பராமரித்த விவசாயிகளுக்கு பரிசு கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்**



க.பரமத்தி,

நஞ்சைகாளக்குறிச்சி ஊராட்சியில் நடந்த சிறப்பு கால்நடை பாதுகாப்புத்திட்ட முகாமில் பசுமாடுகளை சிறப்பாக பராமரித்த விவசாயிகளுக்கு கலெக்டர் ஜெயந்தி பரிசுவழங்கினார்.

கால் நடை பாதுகாப்பு முகாம்

கரூர் மாவட்டம், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நஞ்சைகாளக்குறிச்சி ஊராட்சியில் கால்நடைபராமரிப்பு துறையின் மூலம் சிறப்பு கால்நடை பாதுகாப்புத்திட்ட முகாம் நடந்தது. முகாமிற்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:–

<u>அதிக அளவில் கால்நடைகள்...</u>

கரூர் மாவட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா 14 முகாம்கள் வீதம் 112 முகாம்கள் நடத்த திட்டமிட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த சிறப்பு முகாம் மூலம் கருவூட்டல், தடுப்பூசி, ஆண்மை நீக்கம், மலட்டுத்தன்மை நீக்கம், சினை பரிசோதனை போன்ற பல்வேறு வகையான சிகிச்சைகள் வழங்கப்படும். மேலும் இந்த சிறப்பு முகாமில் ஆடு, மாடுகள் மட்டுமின்றி கோழி, வளர்ப்பு நாய்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது. எனவே இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டு பயன்பெற வேண்டும்.

மேலும் கால்நடைபராமரிப்புத்துறை மற்றும் கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர்களின் ஆலோசனைகளை பெற்று அசோலா புல் வளர்ப்பு தயாரிப்பு குறித்து தேவையான பயிற்சிகள் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த பயிற்சி மூலம் அதிகளவில் கால்நடைகளை வளர்த்து பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு பரிசுபின்னர் அவர் பசுமாடுகளை சிறப்பாக பராமரித்த விவசாயிகளுக்கு கலெக்டர் ஜெயந்தி பரிசு வழங்கினார். முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் ராமநாதன், உதவி இயக்குனர்கள் குழந்தைசாமி, முருகேசன், ராஜேந்திரன், கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் அகிலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விதை விற்பனை நிலையங்களில் அதிகாரிகள் ஆய்வு 6 டன் எடை குறைவு விதைகள் கண்டுபிடிப்பு**



நாகை மாவட்டத்தில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அப்போது 6 டன் எடை குறைவு விதைகள் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆய்வு

மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதை தொடர்ந்து நாகை, திருவாரூர் உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதைதொடர்ந்து நாகை மாவட்ட கலெக்டரின் உத்தரவின்பேரில், நாகை மாவட்டத்தில் விதை விற்பனை செய்யும் நிலையங்களில் தரமான விதைகள் விற்பனை செய்யப்படுகிறதா? என அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். விதை ஆய்வு துணை இயக்குனர் சத்தியமூர்த்தி, விதை ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் கொண்ட குழுவினர் நாகை, மயிலாடுதுறை, மணல்மேடு, குத்தாலம் உள்ளிட்ட பகுதிகளில் விதை விற்பனை செய்யும் நிலையங்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

6 டன் எடைகுறைவு

ஆய்வின்போது பல்வேறு விதை விற்பனை நிலையங்களில் எடை குறைவான, தரமற்ற விதை நெல் மூட்டைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதைதொடர்ந்து சுமார் 6 டன் எடையுள்ள எடை குறைவு மற்றும் தரமற்ற விதை நெல் மூட்டைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதை தடுக்கப்பட்டு, அந்த விதை நெல் மூட்டைகளை உற்பத்தியாளருக்கே திருப்பி அனுப்ப உத்தரவிடப்பட்டது. பின்னர் இதுகுறித்து விதை ஆய்வு துணை இயக்குனர் சத்தியமூர்த்தி கூறியதாவது, விவசாயிகள் விதை நெல் வாங்கும் போது விதை நெல் மூட்டைகளை எடை போட்டு வாங்கி செல்ல வேண்டும். மேலும், விதை சம்பந்தமாக குறைபாடு ஏதேனும் கண்டறியப்பட்டால் நாகை விதை ஆய்வு துணை இயக்குனரிடம் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**வேட்டங்குடிப்பட்டி சரணாலயத்திற்கு பறவைகள் வரத்து தொடங்கியது: வனத்துறையினர் கண்காணிப்பு**



திருப்பத்தூர்,

திருப்பத்தூர் அருகே உள்ள வேட்டங்குடிப்பட்டி சரணாலயத்திற்கு தற்போது வெளிநாட்டு பறவைகளின் வரத்து தொடங்கி உள்ளது.

<u>பறவைகள் சரணாலயம்</u>

திருப்பத்தூர் அருகே புகழ் பெற்ற வேட்டங்குடிப்பட்டி பறவைகள் சரணாலயம் உள்ளது. இந்தப் பகுதியில் பெரியகொள்ளுகுடிப்பட்டி, சின்னகொள்ளுக்குடிப்பட்டி, வேட்டங்குடிப்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கண்மாய்கள் சுமார் 38.4 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளன. இந்தக் கண்மாய்களில் உள்ள நீர் மற்றும் அதனைச் சுற்றி உள்ள காட்டுப்பகுதிகள் வெளிநாட்டு பறவைகள் வந்து தங்குவதற்கும், இனப்பெருக்கத்திற்கும் உகந்த சூழ்நிலையாக அமைவதால் இங்கு ஆண்டு தோறும் வெளிநாட்டு பறவைகள் வந்து செல்கின்றன.

இந்த பகுதி பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது முதல் இந்த கிராம மக்கள் இங்கு வரும் பறவைகளுக்காக இந்த பகுதியில் தீபாவளி

அன்று வெடி கூட வெடிப்பது இல்லை. இந்த சரணாலயத்திற்கு ஆகஸ்டு மாதத்திலிருந்து பறவைகளின் வரவு கணிசமாக தொடங்கும். இங்கு வரும் வெளிநாட்டுப் பறவைகளில் கருங்கொண்டை, நா கணவாய், உன்னிக்கொக்கு, நைட்ஹெரான், வக்கா போன்றவை குறிப்பிடத்தக்கவை ஆகும். மேலும் பச்சைக்கிளி, சிட்டுக்குருவி, நத்தைக்கொத்தி நாரை, முக்குளிப்பான், நாமக்கோழிகள், கொக்கு, புள்ளிஅழகு வாத்து, மயில்கள் என 100 வகையான பறவைகளின் புகலிடமாக இந்த சரணாலயம் திகழ்கிறது.

<u>மீன் குஞ்சுகள்</u>

இங்கு வரும் பறவைகளின் உணவுக்காக வனத்துறையினர் ஆண்டு தோறும் செப்டம்பர் மாதத்தில் மீன் குஞ்சுகள் வாங்கி கண்மாயில் விடுவார்கள். இங்கு வரும் சுற்றுலா பயணிகள் பறவைகளின் அழகை ரசிப்பதற்கு வசதியாக 2 கோபுரங்கள் அமைக்கப்பட்டு தொலைநோக்கி (பைனாகுலர்) வசதியும் செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்களின் வசதிக்காகப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பறவைகள் வரத்து தற்போது ஆரம்பித்துள்ளது. சுமார் 10 ஆயிரம் பறவைகள் வரை சரணாலயத்திற்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுவதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். பறவைகளின் வரத்து ஆரம்பித்துள்ளதையடுத்து வனத்துறையினர் மற்றும் கிராமத்தினர் இரவு, பகலாக பறவைகளை யாரும் வேட்டையாடுகின்றனரா என கண்காணிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தினகரன்

**வெங்காயம் கிலோ ரூ.55க்கு விற்பனை**




சென்னை: தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு: வெங்காய விலையேற்றத்தினை கட்டுப்படுத்த வெளி மாநிலங்களிலிருந்து வெங்காயம் கொள்முதல் செய்து, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதற்காக கர்நாடக மாநிலம் யஷ்வந்த்பூர் பகுதியிலிருந்தும், மகாராஷ்டிரா மாநிலம் லாசல்கான் பகுதியிலிருந்தும் கூடுதலாக பெரிய வெங்காயம் கொள்முதல் செய்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 42 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக கிலோ ரூ.55க்கு விற்பனை செய்யப்படுகிறது. தனியார் கடைகளில் வெங்காயம்

ரூ.70க்கு விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பருப்பு வகைகள் இறக்குமதியில் நஷ்டத்தை ஈடுகட்ட அரசு நிறுவனங்களுக்கு ரூ.113 கோடி: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**



புதுடெல்லி: கடந்த 2006 முதல் 2011ம் ஆண்டு வரை பருப்பு வகைகள் இறக்குமதி செய்ததில் அரசுக்கு சொந்தமான பொது துறை நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் அவற்றுக்கு ரூ.113.40 கோடி வழங்க நேற்று அரசு ஒப்புக் கொண்டது. ஏற்கனவே அளித்துள்ள ஒப்புதல்களின்படி தலா 5,000 டன் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு இறக்குமதி வரும் 5ம் தேதி வந்து சேரும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

டெல்லியில் பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. மத்திய அரசு நிறுவனங்களான நாபெட், பிஇசி, எஸ்டிசி மற்றும் எம்எம்டிசி ஆகியவை கடந்த 2006 முதல் 2011 வரை பருப்பு வகைகளை இறக்குமதி செய்ததில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யும் வகையில்

ரூ.113.40 கோடி வழங்குவதற்கு உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் தெரிவித்த யோசனையை மத்திய அமைச்சரவை ஏற்றுக் கொண்டது என்று அரசு தெரிவித்துள்ளது.

இதனால் அந்த நிறுவனங்களின் நிதி நிலை உயர்ந்து அவற்றின் செயல்பாடுகள் மேம்பாடு அடையும். அதனால் தேவை, சப்ளையில் சீரான நிலை ஏற்பட்டு அத்தியாவசியப் பொருட்களின் விலை குறையும் என அதில் கூறப்பட்டுள்ளது. 2006 முதல் 2011 வரை பருப்பு வகைகளின் தேவை மற்றும் சப்ளை ஆகியவற்றின் இடைவெளியைக் குறைக்க மத்திய அரசு இரண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியது. மத்திய அரசின் இந்த நான்கு நிறுவனங்களும் பருப்பு வகைகளை இறக்குமதி செய்து அவற்றை வெளிச் சந்தையில் விற்பனை செய்யுமாறு கேட்டுக் கொண்டது. இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு வகைகளை நியாய விலைக்கடைகளின் மூலம் ஒரு கிலோவுக்கு ரூ.10 மானிய உதவியுடன் வினியோகிக்கவும் கேட்டுக் கொண்டது.

தற்போது பருப்பு வகைகளின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.150 வரை உயர்ந்துள்ள நிலையில் சில்லரை விலையை கட்டுப்படுத்தும் வகையில் இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் தற்போது மீண்டும் பருப்பு வகைகளை அரசு இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது. இது குறித்து வெளியிடப்பட்ட அரசு செய்திக்குறிப்பில் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு வகைகளை தலா 5000 டன் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இது செப்டம்பர் 5ம் தேதி மும்பை வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள், குறிப்பாக பருப்பு வகைகள் மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விலைகளை கட்டுக்குள் வைக்கவும், அதிக அளவு அது கிடைப்பதை உறுதி செய்யவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாலைச்சுடர்
WWW.MAALAISUDAR.COM

**சென்னை, செப்.2:**வெளி மாநிலங்களிலிருந்து வெங் காயத்தை இறக்குமதி செய்து வெங்காய விலையை கட்டுப்படுத்த முதலமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார். 42 பண்ணை பசுமை கடைகள் மூலம் கிலோ 55 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: மக்கள் நலன் ஒன்றையே லட்சியமாகக் கொண்டு பல முன்னோடி திட்டங்களைத் தீட்டி, சிறப்பான முறையில் செயல்படுத்துவது தான் மக்கள் நலன் பேணும் அரசின் கடமை என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழக முன்னேற்றத்திற்காகவும், தமிழக மக்களின் நலனுக்காகவும் எண்ணற்ற திட்டங்களை முதலமைச்
சர் ஜெயலலிதா தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

வெளிச்சந்தையில், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கட்டுக்கடங்காமல் செல்லும் காலங்களில், வெளிச்சந்தை விலை உயர்வினை கட்டுக்குள் வைக்கும் நடவடிக்கையாகவும், விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், நுகர்வோர்களுக்கு தரமான பொருள்கள் நியாயமான விலையில் ஒரே சீராக கிடைக்கவும், வழி செய்யும் வகையில் விலை நிலைப்படுத்தும் நிதியம் ஒன்று 100 கோடி ரூபாய் நிதித் தொகுப்புடன் முதலமைச்சர்

ஜெயலலிதா உத்தரவின்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, மிளகாய், புளி மற்றும் நல்லெண்ணெய் போன்ற அத்தியவாசியப் பொருட்களின் விலையினை கட்டுப்படுத்துவதற்காக இந்த நிதியம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சமீபத்தில் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பின் வெளிச்சந்தை விலையினை கட்டுப்படுத்தும் வகையில், துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றை குறைந்த விலையில் விற்கும் ஒரு விற்பனை திட்டம் 24.5.2015 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவால் துவக்கி வைக்கப்பட்டது. வெளிச் சந்தையில் உயர்ந்து வந்த காய்கறிகளின் விலையினைக் கட்டுப்படுத்தும் வகையிலும், விவசாயிகள் தமது விளை பொருள்களுக்கு நல்ல விலை பெற்றிடவும், ஏழை எளிய நடுத்தர மக்கள் தரமான காய்கறிகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறும் வகையில், விவசாயிகளையும் நுகர்வோர்களையும் இணைக்கக் கூடிய மக்கள் சேவைத் திட்டமான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் முதலமைச்சரால் 20.6.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக தரமான காய்கறிகள் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. சென்னையில் இரண்டு நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் உள்ளன.

2013- ஆம் ஆண்டு வெங்காயத்தின் விலை மிக அதிகமாக உயர்ந்த போது, முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களிலிருந்து அதிக அளவில் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டுபண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளின் வாயிலாக குறைந்த விலையில் தரமான வெங்காயம், தங்கு தடையின்றி நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டது.

தற்போது, பருவநிலை மாறுதலால் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக, வெங்காயத்தின் விளைச்சல் குறைந்ததால் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகிறது. எனவே, இந்த விலையேற்றத்தின் காரணமாக பொதுமக்கள் பாதிப்படையாமல் இருக்கும் வகையில் வெங்காய விலையேற்றத்தினை கட்டுப்படுத்த வெளி மாநிலங்களிலிருந்து வெங்காயம் கொள்முதல் செய்து, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் ஜெயலலிதாஉத்தரவிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில், நுகர்வோர்களுக்கு தேவையான அளவு வெங்காயம் வெளிச் சந்தையை விட குறைந்த விலையில் தங்கு தடையின்றி வழங்குவதற்காக கர்நாடக மாநிலம் யஷ்வந்த்பூர் பகுதியிலிருந்தும், மகாராஷ்டிரா மாநிலம் லாசல்கான் பகுதியிலிருந்தும் கூடுதலாக பெரிய வெங்காயம் கொள்முதல் செய்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 42 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக கிலோ 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி செயல்படுத்தப்படும் இந்த நடவடிக்கை மூலம் தனியார் விற்பனை நிலையங்களில் 70 ரூபாய் வரை விற்கப்படும் வெங்காயத்தின் விலையை விட குறைவான விலையில் வெங்காயம் பொதுமக்களுக்கு கிடைக்க வழி வகை ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கையின் காரணமாக வெங்காயம் குறைந்த விலையில் நுகர்வோர்களுக்கு பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தங்கு தடையின்றி கிடைப்பதற்கும், தேவைக்கு ஏற்ப, கூடுதல் வெங்காயம் வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 78 அடியாக குறைந்தது



ஈரோடு, செப். 3–

ஈரோடு மாவட்ட மக்களின் விவசாயத்துக்கும் குடிநீருக்கும் ஆதாரமாக உள்ள பவானிசாகர் அணையில் இருந்து தற்போது பாசனத்துக்கு அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

பவானிசாகர் அணையின் முழு கொள்ளளவு 120 அடி ஆகும். இதில் 15 அடி சேறும்–சகதியும் கொண்டது ஆகும்.

கடந்த மாதம் (ஆகஸ்டு) 9–ந் தேதி அன்று பவானி சாகர் அணையின் நீர் மட்டம் 86.06 அடியாக இருந்தது. இந்த நிலையில் பாசனத்துக்காக அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனால் அணையின் நீர்மட்டம் படிபடியாக குறைய தொடங்கியது.

இன்று காலை 9 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 78.01 அடியாக இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 3700 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அணைக்கு 1381 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது.

கடந்த 30–ந் தேதி 202 அடி தண்ணீர் வரத்து இருந்தது. 31–ந் தேதி 497 கன அடி தண்ணீர் வரத்து வந்தது.

இன்று காலை 9 மணி நிலவரப்படி தண்ணீர் வரத்து அதிகமாக வருகிறது. அதாவது அணைக்கு 1381 கனஅடி தண்ணீர் வருகிறது. பில்லூர் அணையில் மின்சாரம் தயாரிக்க தண்ணீரை தேக்கி வைக்கப்படுவதால் தண்ணீர் வரத்து அதிகமாக உள்ளது.

கடந்த 3 நாட்களுக்கு முன்பு அணையில் 79 அடி நீர்மட்டம் இருந்தது. தற்போது மேலும் ஒரு அடிக்கு தண்ணீர் குறைந்துள்ளது. மழை பெய்தால் மட்டுமே அணைக்கு தண்ணீர் வர வாய்ப்புள்ளது.

**விழுப்புரத்தில் பலத்த மழை: தென் மாவட்ட ரெயில்கள் தாமதம்**

சென்னை, செப். 3–

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்திற்கு தென் மாவட்டத்தில் இருந்து வந்த அனைத்து ரெயில்களும் இன்று தாமதமாக வந்து சேர்ந்தன.

விழுப்புரம் பகுதியில் அதிகாலையில் பலத்த மழை பெய்துள்ளது. இதனால் விழுப்புரம் – முண்டியம் பாக்கம் இடையே தண்டவாளத்தில் விரிசல் ஏற்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. இதன் காரணமாக திருச்சியில் இருந்து எழும்பூர் நோக்கி வந்த மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் ரெயில் வழியில் நிறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பின்னால் வந்த பாண்டியன், நெல்லை, மன்னார் குடி எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட அனைத்து ரெயில்களும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன.

அதிகாலை நேரம் என்பதால் ஊழியர்கள் வந்து தண்டவாளத்தை சரி செய்ய சிறிது நேரம் நீடித்தது. பின்னர் ஒரு மணி நேரத்திற்கு பிறகு அந்த பாதையில் போக்குவரத்து சீரானது.

இதனால் எழும்பூர் வரவேண்டிய அனைத்து ரெயில்களும் 1½ மணி நேரம் தாமதமாக வந்தன. காலை 5.15 மணிக்கு வர வேண்டிய மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் 6.30 மணிக்கு வந்து சேர்ந்தது. பாண்டியன் எக்ஸ்பிரஸ் 6.45 மணிக்கும் அதனைத் தொடர்ந்து வந்த நெல்லை உள்ளிட்ட எல்லா ரெயில்களும் தாமதத்துடன் வந்தன.

இதனால் பயணிகள் பெரும் சிரமத்திற்கு ஆளானார்கள். எழும்பூர் ரெயில் நிலையத்தில் பயணிகளை அழைக்க வந்த உறவினர்கள் நீண்ட நேரம் காத்து இருந்தனர்.

ரெயில்கள் தாமதமாக வந்ததால் எழும்பூர் ரெயில் நிலையம் முன்பு கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. ஆட்டோக்கள், கார்கள் சாலையோரம் நின்றதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டது. காலை மற்றும் மாலை நேரங்களில் இந்த பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

ரோடுகளில் வாகனங்கள், ஆக்கிரமிப்பு கடைகள் புதிதாக உருவாகி இருப்பதே இந்த நெரிசலுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. சாலையின் இருபுறமும் வாகனங்களை நிறுத்தி பொது மக்களுக்கு இடையூறு செய்யப்படுகிறது.

மாநகராட்சி மற்றும் போலீஸ் அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தினால் மட்டுமே இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று வெளியூரில் இருந்து வருபவர்களும், சுற்றுலா பயணிகளும் எதிர்பார்க்கிறார்கள்.